# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 07.11.2023 | supeedsam.com | supeedsam@gmail.com


# ஹோட்டலில் உட்கார்ந்து கொண்டு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது



தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்தியாவுடனான தங்கள் ஈடுபாட்டை வலுப்படுத்த வேண்டும் என வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்று உரையாற்றிய அவர், இந்த விடயத்தில் தமிழ் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்களிடம்

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடுக்கு ஏற்பாடு

### சம்பந்தனின் பதவி பறிபோகுமா?

இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் ஜனவரி 27, 28ஆம் திகதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் வவுனியாவில்



02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் புதிதாக முளைத்த புத்தர்



திருகோணமலை - இலுப்பைக்குளம் பகுதியில் தமிழர்களுடைய பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை - நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில் தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நிர்மாணிக்கப்பட்டு வந்த பொரலுகந்த ரஜமஹா விகாரைப் பகுதியில் பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள மக்களால் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

02 ஆம் பக்கத்தில்...

## சம்பந்தன் பதவி விலக விரும்பினால், அது அவருடைய முடிவு

சம்பந்தன் தனது முதுமை காரணமாக பதவி விலக விரும்பினால் அவர் விலக முடியும், அது அவருடைய முடிவு என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



02 ஆம் பக்கத்தில்...

## அம்பிட்டிய தேரருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரருக்கு எதிராக தமிழர்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கும் சிங்கள சட்டத்தரணி தனுக்க ரணன்ஞக முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ளார்.

குறித்த முறைப்பாடானது மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் தேரருக்கு எதிராக தாம் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்தாலும்



இதுவரை அவருக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதையடுத்து, குறித்த தேரருக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாம் முறைப்பாடொன்றை மேற்கொண்டதாக தமது உத்தியோகப்பூர்வ முகநூல் பக்கத்தில் தனுக்க ரணன்ஞக பதிவினை மேற்கொண்டுள்ளார்.

அம்பிட்டிய சுமனரத்தன தேரர், அண்மை நாட்களில் தமிழர்களுக்கு எதிராக பல கருத்துக்களை முன்வைத்திருந்ததோடு, தமிழர்களை வெட்டுவதாகவும் கூறியிருந்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி



பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி (கச்தூடிணஞ் தீச்ஞூஞீ) அமைப்பதற்கான இடங்களையும், அங்கு இடம் பெற்றுவரும் கட்டிட நிர்மாணப்பணிகள் உள்ளிட்ட சகல அபிவிருத்தி பணிளும் மேற்பார்வைக்கு

02 ஆம் பக்கத்தில்...

## சந்திரிகா மீண்டும் அரசியலுக்கு வருகிறார்



முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அரசியல் பணிகளை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதிக்கு கட்சியில் பதவி மற்றும் பொறுப்புகள் வழங்கப்பட வேண்டும் என அவரது தரப்பிலிருந்து யோசனைகளை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...









மட்டக்களப்பு சந்திவெளி பொலிசாரால் சட்டவிரோதமான முறையில் கைதுசெய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர்களது கைதினை கண்டித்தும் அவர்களுக்கான நீதி வழங்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றியத்தின் தலைவரான சபா.சிவயோகநாதன் மற்றும் அருட்தந்தை க.ஜெகதாஸ் ஆகியோரால் சந்திவெளி பொலிஸ் பொறுப்பதிகாரி அவர்களுக்கு எதிராக மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு பிராந்திய மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக பிரதீபன் பதவியேற்பு

(சுமன்)

மட்டக்களப்பு பிராந்திய மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக கடமையாற்றிய எந்திரி. ஏ.இராஜகோபாலசிங்கம் மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றதையடுத்து கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக

கடமையாற்றிய இலங்கை பொறியியல் சேவை தரம் ஐ இல் உள்ள, கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த பொறியியலாளர் கந்தசாமி பிரதீபன் அவர்கள் மட்டக்களப்பு பிராந்திய மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையின் புதிய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக கிழக்கு மாகாண பிரதம செயலாளரினால் நியமனம் பெற்று இன்றைய



தினம் தனது கடமைகளை உத்தியோகபூர்மாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் விஞ்ஞானமானி பட்டத்தை சிவில் துறையில் பெற்ற பட்டதாரியான இவர், இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் பட்டயப் பொறியியலாரும் ஆவார். இவர் தனது ஆரம்பக்கல்வியை கோட்டைக்கல்லாறு திருவள்ளுவர் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மட்ஃமெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் பயின்றவராவார்.

கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 16 வருடகாலமாக கடமையாற்றி வருகின்ற சிரேஸ்ட பொறியியலாளரான இவர் மட்டக்களப்பு பிராந்தியத்திற்குட்பட்ட செங்கலடி மற்றும் பட்டிருப்பு நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுகளுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளராகவும் கடமையாற்றி நீர்ப்பாசன அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பினை வழங்கியவர்.

இவர் செங்கலடி பிரிவுக்கு பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளராக கடமையாற்றிய காலப்பகுதியில் நீண்டகாலமாக கைவிடப்பட்டிருந்த மியான்கல் குளம் இவரது காலப் பகுதியிலேயே (2011-2013) பாரிய நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு முதன் முறையாக 2013 இல் நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் 2009, 2010களில் பீஸ் திட்டத்தின் கீழ் புளுகுணாவைக் குளம் மற்றும் கங்காணியார் குளம் நிர்மாணப்பணிகளில் தரக் கட்டுப்பாடு மற்றும் நிர்மாணப் பணிகளை நிறைவேற்றுவதில் இவரது பங்களிப்பு அளப்பரியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கண்டி,கலஹா ஸ்ரீ சண்முகா மாணவி செஷினி தேசிய மட்ட தமிழ்மொழித்தின பேச்சுப் போட்டியில் முதலிடம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில்மிகவும்பின் தங்கிய பிரதேசமான , கலஹா ஸ்ரீ சண்முகா ஆரம்ப வித்தியாலையத்தை சேர்ந்த மாணவி முரளிதரன் செஷினி பிரிவு 01 பேச்சு போட்டியில் அகில இலங்கை தமிழ் மொழித்தினப்போட்டியில் ஒன்பது மாகாணங்களுடன் போட்டியிட்டு முதலாம் இடத்தை பெற்றுள்ளார்.

இம்மாணவி பாடசாலைக்கும், கலஹா மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பாடசாலை அதிபர்மற்றும்கல்விசமூகம், இம்மாணவி , வகுப்பாசிரியர் எம்.ஐ.எப். இர்சாட் ஆகியோருக்கு வாழ்த்துக்களையும்,பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

## சம்பந்தன் பதவி விலக விரும்பினால், அது அவருடைய முடிவு

ஒரு ஊழல் பேர் வழியாக காட்ட முனைந்தால் அது பிழை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் வைத்து மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், 'தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றில் இலங்கையில் இடம் பெறும் ஊழல் மோசடிகள் தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்து தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நீண்ட காலமாக பாராளுமன்றம் செல்லவில்லை.ஆனால் அவர் சம்பளம் எடுக்கின்றார். அவருக்கான சலுகைகள் கிடைக்கிறது. இது ஊழல் இல்லையா? என தனது கருத்தை முன் வைத்துள்ளார்.

என்னை பொறுத்த வகையில் பாராளுமன்றம் எல்லோருக்கும் வழங்கக்கூடிய சலுகைகள்,சம்பளம் போன்றவற்றை தான் சம்பந்தனுக்கும் வழங்கியுள்ளனர்.

பாராளுமன்றத்திற்கு எல்லோரும் ஒழுங்காக போவதில்லை.பல சந்தர்ப்பங்களில் அவர்கள் வெளிநாடு சென்றால் பாராளுமன்றம் போக முடியாத நிலை ஏற்படும். சுகயீனம் ஏற்பட்டால் பாராளுமன்றம் செல்ல முடியாது.இதனால் அவர்கள் யாரும் சம்பளத்தை பெற்று கொள்ளாமல் இருக்க மாட்டார்கள்.

எல்லோரும் சம்பளத்தை பெற்றுக்கொள்கிறார்கள். சம்பந்தனை ஒரு ஊழல் பேர்வழி என்று சுமந்திரன் கூற முயன்றால் அது தவறானது. பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனை பொருத்தவரையில் ஆயிரம் முரண்பாடுகள் அவருடன் எங்களுக்கு இருக்கின்றது. சம்மந்தன் ஒரு போதும் சும்மா இருக்கவில்லை. அவர் வெளிநாட்டு தூதுவர்களை சந்திக்கின்றார்.வெளிநாட்டில் இருந்து வருகின்ற பல்வேறு இராஜதந்திரிகளை சந்திக்கின்றார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்துக்கு கடிதம் எழுதுகிறார்.ஜனாதிபதியுடன் இடம் பெறும் கலந்துரையாடல்களில் கலந்து கொள்கிறார். அப்படியான ஒருவரை எதுவும் செய்யாதது போல் ஒரு தோரணையை காட்ட முனைவதும், அவர் சம்பளத்தை வேண்டி ஊழல் எதுவுமே செய்யாது ஊழல் செய்கிறார் என்ற அடிப்படையில் சுமந்திரன் பேச முனைவது தவறானது.

இலங்கையின் ஊழல்கள் குறித்து பேசும் நிகழ்வு ஒன்றில் இவ்வாறான கருத்தை சுமந்திரன் முன் வைத்துள்ளமையானது ஏற்றுக் கொள்ள முடியாதது.

இதனை ஊழல் என்று ஏற்றுக்கொள்ள முடியாது அவர்களுக்கான சம்பளம் மற்றும் சலுகைகள் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

எனவே, பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒரு ஊழல் பேர் வழியாக காட்ட முனைந்தால் அது பிழை.

சம்பந்தன் தனது முதுமை காரணமாக பதவி விலக விரும்பினால் அவர் விலக முடியும். அது அவருடைய முடிவு. உள் வீட்டு விவகாரமாக இருந்தாலும் கூட நாங்கள் வெளியில் இருந்து பார்க்கின்ற போது இவ்வாறான நடவடிக்கைகள் தவறாகவே காணப்படும்.' என அவர் தெரிவித்தார்.

## அம்பிட்டிய தேரருக்கு எதிராக மனித உரிமைகள்..

அத்துடன், சிங்களவர்களுக்கு எதிரான தமிழர்களின் நடவடிக்கைகளை பொலிஸார் எதிர்க்காமை குறித்தும் அவர் அதிருப்தி வெளியிட்டிருந்ததுடன், பொலிஸ் நிலையத்துக்கு சென்று குழப்ப நிலையையும் உருவாக்கியிருந்தார்.

இந்நிலையில், பொலிஸாரை எதிர்த்து குரல் எழுப்பிய அம்பிட்டிய சுமனரத்ன தேரருக்கு எதிராக, பொலிஸாரால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாமை குறித்து தாம் கவலையடைவதாக தனுக்க ரணன்ஞக கூறியுள்ளார்.

## சந்திரிகா மீண்டும் அரசியலுக்கு வருகிறார்

இந்த விடயம் தொடர்பில் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடியுள்ளதுடன், அதற்கமைய அவர் எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவுடன் கலந்துரையாடுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியின் சிரேஷ்ட தலைமைகள் ஐவரை நியமித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களான மஹிந்த அமரவீர, ஷான் விஜயலால் டி சில்வா, பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால, தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க, பொருளாளராக லசந்த அழகியவண்ண ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஐவர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா ஆகியோருக்கு இடையிலான விசேட கலந்துரையாடலொன்று எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

கட்சியின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு கட்சியின் தலைவர் போன்ற பதவியை அவருக்கு வழங்குவது பொருத்தமானதாக இருக்கும் என அவர் தரப்பில் இருந்து கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு கட்சி சம்மதிக்கும் பட்சத்தில் இரு பதவிகள் உருவாக்கப்பட உள்ளதாக தெரிய வந்துள்ளது.

இருப்பினும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் திடீர் அரசியல் வருகை தொடர்பில் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகின்றது.

## ஹோட்டலில் உட்கார்ந்து கொண்டு தமிழர்

இருந்து அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1983-87 காலப்பகுதியில் தமிழ் கட்சிகளும் அதன் தலைவர்களும் புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள இந்தியத் தலைவர்களுடன் அடிக்கடி தொடர்பு இருந்ததை போன்று தற்போது அவ்வாறான உறவு இல்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் உட்கார்ந்து கொண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதுவது மட்டும் பலன் தராது என்றும் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்விற்காக இந்தியாவிற்குள் குரல் இருக்க வேண்டும் என்றும் புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் தமிழ்த் தலைவர்கள் நெருங்கிய உறவைப் பேணினால் மட்டுமே இது சாத்தியமாகும் என்றும் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

இதே நேரம் தமிழகத்தில் வாழும் இலங்கை அகதிகளுக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் தொடர்பாக மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் வரதராஜப் பெருமாள் கூறியுள்ளார்.

## பொத்துவில் ஆதார வைத்தியசாலையில்...

உட்படுத்தப்பட்டது.

அதன்படி, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையிலான குழுவினர் (06) இதனை பார்வையிட்டனர்.

இதன்போது பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர், பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் எம்.ஐ.எம்.றஹீம் மற்றும் பொறியியலாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

சீன அரசின் நிதியுதவில் சகல வசதிகளையும் கொண்ட மூன்று மாடிக்கட்டிடம் மற்றும் அவசர சிகிச்சை பிரிவு நிருவாகப் பிரிவு வசதிகளைக் கொண்ட கட்டிட தொகுதி என பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடுக்கு ஏற்பாடு

நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர்கள் பங்கேற்றிருக்கவில்லை. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசனின் தாயாரின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றதன் காரணமாக அவர்கள் குறித்த கூட்டத்தில் பங்கேற்றிருக்கவில்லை.

மாநாடு நடைபெறுவதற்கு ஒருவாரத்துக்கு முன்னதாக அதாவது, ஜனவரி 21ஆம் திகதிக்கு முன்னதாக கட்சியின் பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

இந்நிலையில் கூட்டம் குறித்த கட்சியின் ஊடகப் பேச்சாளரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கருத்து வெளியிடுகையில்,

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் கட்சியின் வருடாந்த மாநாட்டிற்கான திகதியை தீர்மானிப்பதை மையப்படுத்தியே நடைபெற்றிருந்தது. இதன்போது, கட்சியின் கட்டமைப்புக்கள் மற்றும் கிளைகள் அமைப்பு உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக கவனத்தில் கொள்ளப்பட்டது. கட்சியின் மாநாட்டை எதிர்வரும் ஜனவரி மாதம் 27,28ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த தினத்துக்கு ஒருவாரகாலத்துக்கு முன்னதாக அதாவது 21ஆம் திகதி கட்சியின் பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேநேரம், கட்சியின் மாநாட்டுக்கான தினம் மற்றும் தீர்மானங்களின் உள்ளடக்கங்கள் தொடர்பில் மீண்டும் மத்திய குழு கூடித் தீர்மானம் எடுக்கவுள்ளது. என்றார்.

இதேவேளை, மேற்படி மத்திய செயற்குழு கூட்டத்தின்போது, வவுனியாவைச் சேர்ந்த சேனாதிராஜா என்ற உறுப்பினர், இரா.சம்பந்தன் பதவி விலக வேண்டும் என்பது தொடர்பில் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பான விளக்கத்தை வழங்குமாறு கோரினார்.

அதன்போது கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் அதற்கான விளக்கத்தை வழங்குமாறு சுமந்திரனை கோரினார்.

இதனையடுத்து சுமந்திரன் நீண்ட விளக்கமொன்றை வழங்கியிருந்தார்.

குறித்த விளக்கத்தில் அவர் தெரிவித்ததாவது,

2010ஆம் ஆண்டுக்கு முன்னதாக என்னை அரசியலில் ஈடுமாறு இரண்டு தடவைகள் சம்பந்தனும், சேனாதிராஜாவும் வலிந்து அழைத்தபோதும் அதனை நிராகரித்த நிலையில் மீண்டும் 2010ஆண்டு தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்புரிமையைப் வழங்கி அரசியலுக்கு அவ்விருவருமே அழைத்து வந்தனர். அதன் பின்னர் 2015ஆம் ஆண்டு தேர்தல் அரசியலுக்கான களத்தினையும் அவர்களே ஏற்படுத்தினார்கள்.

சம்பந்தன், தேர்தல் அரசியலுக்கு விடை கொடுக்கும் தீர்மானத்தினை அப்போது எடுத்திருந்தார். அதேநேரம் மாவை சேனாதிராஜாவும் வடக்கு முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடப்போவதாக அறிவித்தார்.

2020ஆம் ஆண்டு பெப்ரவரி 26ஆம் திகதியன்று சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது சம்பந்தன், சேனாதிராஜாவின் முடிவுகளை மையப்படுத்தி என்னால் தொடர்ச்சியாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாது. ஆகவே, அரசியல் செயற்பாடுகளில் இருந்து வெளியேறுகின்றேன் எனக் கூறியிருந்தார். அந்த முடிவினையே அறிவித்தேன். எனினும், சம்பந்தனும், சேனாதிராஜாவும் அதனை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை.

பின்னர், திருகோணமலையில் சம்பந்தனின் முடிவினை அறிவிக்கும் கூட்டமொன்று நடத்தப்பட்டது. அதன்போது சம்பந்தன் தனது முடிவினை அறிவித்த போதும், திருகோணமலை மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனால் சம்பந்தன் தனது முடிவினை மீள் பரிசீலனை செய்தார். அதன்போது இரண்டு நிபந்தனைகளை விதித்தார். அதில் முதலாவது, கட்சியின் முதலாவது தேசியப் பட்டியலை குகதாசனுக்கு வழங்குதெனவும், இரண்டாவதாக தான் ஒருவருடத்துக்கே பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பேன் என்பதுமாகும். அதற்கு மேல் தன்னுடைய உடல்நிலை அதற்கு இடமளிக்காது என்றும் குறிப்பிட்டார்.

அதன்பின்னர், வவுனியாலில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் திருகோணமலை விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டபோது சம்பந்தனின் நிபந்தனை சம்பந்தமான விடயம் பேசுபொருளாகியது.

அச்சமயத்தில் மத்தியகுழு சம்பந்தனுடன் நேரில் குறித்த விடயம் சம்பந்தமாக பேச தீர்மானித்தது. அதன்போது நானும்,சேனாதிராஜாவும் நேரில் சென்று விடயங்களை பகிர்ந்தபோது, சம்பந்தன் மக்கள் தனது நிலைமைகளை அறிந்தே தன்னை தெரிவு செய்ததாக சுட்டிக்காட்டி பதவியிலிருந்து விலகும் தீர்மானத்தை மறுதலித்தார்.

இந்த நிலையில் தான் ஆங்கிலமொழியிலான தொலைக்காட்சி கலந்துரையாடலொன்றுக்கு நான் அழைக்கப்பட்டேன். இந்த பின்புலத்தில்தான் எனது கருத்துகளை பகிர்ந்தேன் எனவும் சுமந்திரன் எம்.பி கூறியுள்ளார்.

## திருமலையில் புதிதாக முளைத்த புத்தர்

அந்தப் பகுதியில் ஆரம்பத்தில் புத்த விகாரை கட்டுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் அதற்கு அப்பகுதி மக்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

அத்துடன் அந்த விடயம் தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் பொதுமக்கள் முறையிட்டதையடுத்து கடந்த ஒகஸ்ட் மாதம் ஆளுநரால் குறித்த கட்டுமானங்களுக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும், தடை உத்தரவையும் மீறி குறித்த பகுதியில் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதற்கு எதிராக பொதுமக்கள் 03.09.2023 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

அதன் பின்னர் 09.09.2023 அன்று அந்தப் பகுதியில் பொரலுகந்த ரஜமஹா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் எவ்வித அனுமதி இல்லாத நிலையிலும் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்தநிலையில் இன்று காலை அந்தப் பகுதியில் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

பௌத்த மக்களே இல்லாத, தமிழ் மக்கள் காலாகாலமாக வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும், இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாகவும் சிலர் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர் எனவும், புத்த விகாரையின் கட்டுமானங்களைத் தொடர்ந்து இப்பகுதிகளைச் சூழ சிங்கள மக்களைக் குடியேற்றும் திட்டம் உள்ளது எனவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

# இலங்கை தமிழரசுக்கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான நிர்வாகத் தெரிவு



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் பொத்துவில் தொகுதி தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக்கட்சியின் ஆலையடி வேம்பு இணைத் தலைவருமான கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்.

இணைத் தலைவராக அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தரும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் காரைதீவு இலங்கை தமிழரசு கட்சியின்தலைவருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தெரிவு செய்யப்பட்டார்.

திருக்கோவில் தமிழரசுக் கட்சியின் உபசெயலாளரும் ஆசிரியருமான த.தயாபரன் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் காரைதீவு கிளை உபசெயலாளருமானசி.சிவகுமார்பொத்துவில்தொகுதியின் உபசெயலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

பொத்துவில் பிரதேச சபை உறுப்பினரும் பொத்துவில்இலங்கை தமிழர கட்சியி கிளைத் தலைவருமான சுபோகரன் பொருளாளராக தெரிவு செய்யப்பட்டார். மேலும் சிரேஷ்ட உறுப்பினர்களாக சோ.பாக்கியராஜ், க.தருமராஜா, அ.கலாநேசன், தே.புனிதன், சி.இராஜகுமார், வே.கேதீஸ்வரன், இ.ஜெகநாதன், க.கோகுலன் ,ஆ.தர்மதாச், க.செல்வ பிரகாஷ் இலங்கை தமிழரசுக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கான 15 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மட்டு மேச்சல் தரைபகுதியில் புதிய போலிஸ் சோதனைச்சாவடி திறந்துவைப்பு





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மேச்சல்தரை மயிலத்தமடு மாதவனை பகுதியில் அமைக்கப்பட்ட பொலிஸ் சோதனைசாவடியை மட்டு சிரேஷ;ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ. எதிர்மன்ன ஞாயிற்றுக்கிழமை (05) திறந்து வைத்ததையடுத்து பொலிசார் கடமைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த மேச்சல்தரை பகுதியில் பொலிஸ்காவல்அரண்ஒன்று அமைக்குமாறு மாவட்ட அபிவிருத்திகுழு கூட்டத்தில் பண்ணையாளர்கள் கோரிக்கைக்கு அமைய சோதனைசாவடி அமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானிக்கப்பட்ட பொலிஸ் சோதனைச் சாவடியை கரடியனாறு பொலிஸ் நிலையத்தின் பிரிவாக புதிய சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு அதனை நேற்று சிரேஷ;ட பொலிஸ் அத்தியட்சகர் சென்று பார்வையிட்டு பொலிசாரை கடமைக்கு அமர்த்தி கடமைகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.

# ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருது பெறும் ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல்!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் கிழக்கு மாகாண இலக்கிய விழாவின் 2023 ஆண்டுக்கான விருது வழங்குவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களில் ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருதுக்கு மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண இலக்கிய விழா 2023 ஆண்டுக்கான தேர்வு முடிவுகளை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்டுள்ளது. அதிலேயே இளங்கலைஞர் விருதுக்கு ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் தேர்வு செய்யப்பட்டுள்ளாதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடகவியயலாளர் சக்திவேல் அவர்கள் சுமார் 18 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் சுயாதீன ஊடகவியலாளராக செயற்பட்டு வருகின்றார். அவர் கிழக்கு மாகாணத்தின் பல கிராமப்புறங்களுக்கும் நேரில் சென்று மக்களின்



பிரச்சனைகளை செய்திகளாகவும், கட்டுரைகளாகவும், ஆவணப்படுத்தல் தொகுப்புக்கள் ஊடாகவும் வெளிக்கொணர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் அவர் 2008 இல் சிறந்த மக்கள் சேவை ஊடகவிருது, 2018 இல் சிறந்த கட்டுரையாளருக்கான விருது, கடந்த வருடம் சுப்பிரமணியம் செட்டியார் விருது, உள்ளிட்ட தேசிய விருதுகள் மற்று கிராமிய, பிரதேச மட்டங்களில் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

யோகாசன பயிற்றுவிப்பாளராகவும், முதலுதவிப் பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டு வருவம் அவர் பாடலாசிரியர், எழுத்தாளர் என இலக்கியத்துறையில் மிளிர்கின்ற அவர் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளராகவும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட பல பொது அமைப்புக்களினூடாக பல சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் கிழக்கு மாகாண இலக்கிய விழா எனும் தொனிப்பொருளின் கீழ் வித்தகர் விருது, இளங் கலைஞர் விருது, பாடல் போட்டிகளுக்குரிய விருது, கலை இலக்கிய அறிவுப் போட்டியில் வெற்றி பெறும் கலை மன்றங்களுக்கான விருது, அரச உத்தியோகத்தர்களுக்கான படைப்பாக்க போட்டிகளுக்கான விருது, சித்திரம், ஓவியம், புகைப்படம், கவிதை, மற்றும் நூல்களுக்கான விருதுகளையும் வருடாந்தம் வழக்கி கலை இலக்கியத்துறையில் மிளிர்கின்றவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஞானம்மா வில்லியம் யோன் மில்ரனுக்கு செங்கலை வித்தகர் விருது



(வாஸ் கூஞ்ஞ)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரனையுடன் நானாட்டான் பிரதேச செயலகம் மற்றும் நானாட்டான் பிரதேச கலாச்சாரப் பேரவை இணைந்து நடாத்திய பிரதேச பண்பாட்டு பெருவிழாவும் கலைஞர்கள் சமூக ஆர்வலர்கள் மதிப்பளிக்கும் நிகழ்வு நானாட்டான் பிரதேச செயலாளர் மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார் அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது

இந்த நிகழ்வானது நானாட்டான் பிரதேச செயலகத்தின் கலாச்சார மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (3) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பள்ளங்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திருமதி ஞானம்மா வில்லியம் யோன் மில்ரன் என்ற இசை ஆசிரியர் ''செங்கலை வித்தகர்'' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் பாடல்களை ஆக்கவும் . இசையமைக்கவும் , நாடகங்கள் எழுதவும் சிறப்பான ஆற்றல் கொண்டவர். இவர் பல பாடசாலை மாணவர்களை இசைப் போட்டிகளுக்கு பயிற்றுவித்து தேசிய மட்டம்வரை பங்குபற்ற வைத்து வெற்றியீட்ட வைத்த இசை ஆசிரியர்.

இவர் இன்று வரை பல பாடலாக்க இசைப் போட்டிகளுக்கு நடுவராக பங்குபற்றி தனது கலை பயணத்தை தொடர்ந்து வருகின்றார்.

இதையிட்டு இவருக்கு ''செழுங்கலை வித்தகர்'' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதில் நானாட்டான் பிரதேச செயலகமும் கலாச்சார பேரவையும் பெருமிதம் கொண்டுள்ளது.

# ஜனாதிபதி சகல பொறுப்புக்களையும் தனியொருவராக ஏற்று நாட்டின் அபிவிருத்திக்காக செயல்படுகிறார்

## கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு தனியார் பல்கலைக் கழகம் பொதுப் பயன்பாட்டின் பின்னர் மீளக் கையளிப்பதற்காக நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போது கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் பொதுப்பயன்பாட்டின் பின்னர் அதன் தவிசாளரும் முன்னால் கிழக்கு மாகாண ஆளுநருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவிடம் நிறுவனத்தின் திறவுகோலை மீண்டும் கையளிக்கும் நிகழ்வு (4) திகதி மட்டக்களப்பு, புனானையில் அமைந்துள்ள நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு தனியார் பல்கலைக் கழகம் தனியார் நிதிப் பங்களிப்புடன் கட்டப்பட்டு வந்த நிலையில், ஏப்ரல் குண்டுத்தாக்குதல் காலப்பகுதியில் சர்ச்சைக்குள்ளானதுடன், இராணுவ கட்டுப்பாட்டின் கீழ், கடந்த ஐந்து ஆண்டுகள் கொரோனா தனிமைப்படுத்தல் மத்திய நிலையமாக செயல்பட்டு இந்நிறுவனம் மீண்டும் அதன் கல்விச் சேவைகளை ஸ்ரீலங்கா தொழில்நுட்ப கெம்பஸ் ஸுடன் இணைந்து செயல்படுவதற்காக அதன் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.





இங்கு தொடர்ந்து உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்;

''ஜனாதிபதி நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக சகல வழிகளிலும் முயற்சி செய்து வருகிறார். என்னால் முடியும் என்ற உந்துதலுடன் ஜனாதிபதி சகல பொறுப்புகளையும் தனியொருவராக பொறுப்பெடுத்து, இலங்கை நாட்டின் அபிவிருத்திக்காக செயல்படுகிறார். அந்த வகையில் பங்களாதேஷ் நாட்டுக்கான கடனை பூரணமாக செலுத்தி உள்ளார்.

இந்த கல்வி நிறுவனத்தில் 2000 தொடக்கம் 3000 பட்டதாரிகளை

நீண்டகால நோக்குடன் உள்வாங்கக் கூடியது. இதனை கொழும்பில் அமைத்திருந்தால் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை வருமானமாக ஈட்டியிருக்கலாம். கடந்த கால துரதிஷ்டவசமான நிலை காரணமாக அது தடைப்பட்டிருந்தாலும், இந்நிறுவனம் சேவை நோக்கில் இந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு வருடாந்தம் 10,000 பட்டதாரிகளை வெளியேற்றக் கூடிய வசதிகள் காணப்படுகின்றன.

ஜனாதிபதி எப்போதும் கல்வி செயற்பாடுகளை மிகவும் ஆதரிக்க கூடியவர். அதனால் இந்த நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இதனை மீளக் கையளித்துள்ளார்.

சமூக ஒற்றுமையை நோக்காக கொண்ட இந்த கல்வி நிறுவனத்தில் நாட்டை விரும்புகின்ற நாட்டிற்காக செயல்பட வேண்டும் எனும் எண்ணமுடைய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களை குறைந்த கட்டணத்தில் கல்வியைக் கற்று பட்டதாரிகளாக ஆக்குவதற்கு இந்நிறுவனம் எதிர்பார்க்கிறது'' எனக் குறிப்பிட்டார்.

இதன்போது உரையாற்றிய மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தமது கல்வி நிறுவனத்தை மீளக் கையளித்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றிகளைத் தெரிவித்ததுடன், ஜனாதிபதி சார்பில் இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்தார்.

அத்துடன் பிராந்தியத்தில் உள்ள பொலன்னறுவை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கு ஏற்றவாறு உருவாக்குவதற்காகவே ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அதற்கிணங்க புலமைப் பரிசில் திட்டங்களுக்கு ஊடாக இந்நிறுவனத்தில் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் ஊவா, அனுராதபுரம், தம்புள்ளை போன்ற பகுதி மாணவர்களும் இலகுவாக வந்து செல்லும் நோக்கில் செங்கலடி பதுளை வீதி சவூதி அரேபிய அரசாங்கத்தின் உதவியுடன் அபிவிருத்தி செய்ததாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஜனவரி மாதத்தில் மாணவர்கள் உள்வாங்கப்படுவதுடன் பெப்ரவரி மாதத்தில் உத்தியோகபூர்வ கல்வி நடவடிக்கைகளுக்கான ஆரம்ப வைபவம் இடம்பெறவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா தொழில்நுட்ப கெம்பஸ்சின் உடன் இணைந்து செயற்படவுள்ள மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் தகவல் தொழில்நுட்பம், விவசாயம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் போன்ற துறைகளில் படிப்புகளுடன் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதுடன் உள்நாட்டு, வெளிநாட்டு மாணவர்களையும் வரவழைத்து அவர்களையும் இணைத்து, மறுபக்கத்தில் நாட்டிற்கு வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதையும் நோக்காக கொண்டு செயல்பட விருப்பதாகவும் தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி செயலகம், அரசாங்க தகவல் திணைக்களம் என்பவற்றின் உயர் அதிகாரிகள், ஸ்ரீலங்கா தொழில்நுட்ப கெம்பஸ் , மட்டக்களப்பு கெம்பஸ் ஆகியவற்றின் உபவேந்தர்கள், லேக் ஹவுஸ் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், வாழைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் பங்கேற்றனர்.

# வித்தகர் விருதுக்கு விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தெரிவு

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உயரிய விருதான வித்தகர் விருதுக்காக காரைதீவைச் சேர்ந்த சிரேஸ்ட ஊடகவியலாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி தேசமான்ய வி.ரி. சகாதேவராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கல்வித்துறையிலும் ஊடகத்துறையிலும் 35 வருட கால அனுபவம் பெற்ற தம்பிராஜா சகா தேவராஜா பல்துறை வித்தகராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் காரைதீவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பி ராஜா ஓய்வு நிலை தலைமை ஆசிரியர் கைலாயபிள்ளை தங்க நாயகம் தம்பதியினருக்கு பிறந்த எட்டுப்பேரில் இறுதியாக 28 .9 .1964 இல் பிறந்தார்.

இவர் ஆரம்ப கல்வியை இ.கி.ச.ஆண்கள் பாடசாலையிலும் உயர் கல்வியை மட்டக்களப்பு கல்லடி சிவானந்த வித்யாலயத்திலும் பெற்றார்.

1986 இல் டெலிக் ஆங்கில ஆசிரியராக பின்னர் 1988 இல் விஞ்ஞான ஆசிரியராக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் நியமனம் பெற்றார். இவர் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞான துறையில் பயிற்சி பெற்று அதே பாடசாலையில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக கடமை ஏற்றார் .அதன் பின்பு 1999 இலிருந்து கடந்த 25 வருட காலமாக சம்மாந்துறை கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமை ஆற்றி வருகிறார்.

அதேபோன்று 25 வருட காலமாக சமாதான நீதவானாகவும் சேவை ஆற்றி வருகிறார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைத் துறையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த இவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டப் படிப்பையும் பூர்த்தி செய்தார். பின்னர் கல்வி முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார்.

1986 களிலிருந்து வீரகேசரி தினகரன் சுடரொளி டெய்லி நியூஸ் மெட்ரோ மற்றும் இலங்கை வானொலி வெளிநாட்டிணையங்கள் போன்ற பல ஊடகங்களுக்கு இன்று வரை எழுதி வருகின்றார்.அன்று கிழக்கில் வெளியான விடிவானம் காலைக் கதிர் ஈழநாதம் அரங்கம் போன்ற பத்திரிகைகளில் எழுதியவர். கல்முனை நெற் இணையத்தளத்தின் பரிமாணம் பத்திரிகையின் முதல் பிரதம ஆசிரியராக பணியாற்றினார்.

யாழ் மண்ணில் வெளியாகும் காலைக் கதிர் காலை முரசு ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும் எழுதி வருகிறார்.

சிறந்த ஆசிரியராக தொழிற்சங்க வாதியாக எழுத்தாளராக பேச்சாளராக அறிவிப்பாளராக வர்ணனையாளராக தலைவராக நிர்வாகியாக பரிணமித்து வருகிறார்.

இதுவரை ஆயிரக்கணக்கான காத்திரமான கட்டுரைகளை அவ்வப்போது படைத்து வருகிறார் .

ஊழியில் ஆளி என்ற சுனாமி வரலாற்று நூலை 2005இல் எழுதி வெளியிட்டார் .

1992 இல் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்ற தலைவராக



பணியாற்றிய வேளை சுவாமி விபுலானந்தருக்கு நூற்றாண்டு விழா சிலை எழுப்பியதுடன் அங்கு வருடாந்தம் வெளியாகும் கலைச்செல்வி சிறப்பு நூலுக்கு ஆசிரியராகவும் பணியாற்றினார் .

சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றம் சுவாமி நினைவாக வெளியிட்ட அடிகளார் நினைவாலய மலருக்கும் சுவாமி நடராஜானந்தர் நூற்றாண்டு விழாச்சபையின் செயலாளராக இருந்த காலம் சுவாமிக்கு சிலை எழுப்பியதோடு நூற்றாண்டு விழாவை ஒட்டிய சேவையின் சிகரம் என்ற நூலையும் ஆசிரியராக இருந்து வெளியிட்டார்.

இதைவிட அம்பாறை மாவட்ட கலாசார சாகித்திய விழாவில் 2007 2008 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரு தடவைகள் ஊடகத்துறை மற்றும் எழுத்து துறைகளில் ஆற்றிய பணிக்காக அம்பாறை மாவட்ட செயலகம் திகாமடுல்ல அபிமானி என்ற விருதுகளையும் பாராட்டுகளையும் வழங்கியது. இதைவிட இலங்கை அரசின் அதி உயர் ஊடக விருதான ஜனாதிபதி ஊடக விருதுச் சான்றிதழ் இவருக்கு 2019 இல் வழங்கப்பட்டது.

இலங்கையின் உயர்ந்த ஊடகத்துறை விருதான மக்கள் சேவை ஊடக விருது 2007 இல் வீரகேசரி வார வெளியீட்டில் வளமின்றி வாழும் வளத்தாப்பட்டி மக்களின் அவலம் என்ற தலைப்பில் இவரால் எழுதப்பட்ட சிறப்பு கட்டுரைக்காக கொழும்பு கோல் பேஸ் ஹோட்டலில் வைத்து விருது வழங்கப்பட்டது. 2008இல் அம்பாறை மாவட்ட சிறப்பு ஊடகவியலாளர் விருது தேசிய பாதுகாப்பு தினத்தில் அனர்த்தம் தொடர்பில் சிறப்பான ஊடகத்துறை பங்களிப்புக்காக இரத்தின புரியில் வைத்து அமைச்சர் மஹிந்த சமரசங்கவினால் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் இத்தாலி மற்றும் பேங்கொக் நாடுகளில் விசேட பயிற்சி பெற்றிருந்தார்.

மேலும் சர்வசமயம் சமாதானம் கல்வி தொடர்பில் பங்களாதேஷ் மலேஷியா சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பயிற்சி பெற்றார்.

2019 இல் இலங்கை இந்துசமய கலாச்சார அமைச்சு கொழும்பு தாமரைத் தடாகத்தில் வைத்து கலைச்சுடர் விருது வழங்கி கௌரவித்தது.

காரைதீவு பிரதேச சபை 2007 இல் நடத்திய வித்ய சாகித்திய விழாவில் வித்யகலா ஶ்ரீ எனும்விருதையும் நிந்தவூர் பிரதேச சபை 2000 ஆண்டு நடத்திய விழாவில் விபுல ஶ்ரீ என்ற விருதும் வழங்கப்பட்டது.

மனித அபிவிருத்தி தாபனம் றோஸ் ஷரிட்டி போன்ற பல நிறுவனங்கள் பல பட்டங்களை வழங்கி வைத்தன.

2008இல் நாவிதன்வெளி பிரதேச செயலகம் நடத்திய சாஹித்திய விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது உட்பட இன்னும் பல விருதுகளும் பட்டங்களும் பொன்னாடை கௌரவங்களை கிடைத்தன . 2009 இல் காரைதீவு பிரதேச செயலகம் நடாத்திய சாஹித்ய விழாவில் உயர் விருதான விபுல மாமணி விருது வழங்கப்பட்டது.

2011 இல் அகில இன நல்லுறவு ஒன்றியம் சாம தேசமான்ய விருது வழங்கப்பட்டது.

இதைவிட இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளனம் செயலாளராகவும் சமயங்களின் சமாதானத்திற்கான ஒன்றிய செயலாளராகவும் அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்க உப தலைவராகவும் சேவையாற்றினார்.

மேலும் காரைதீவு விளையாட்டு கழகம் சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றம் முதலாம் பிரிவு கிராம அபிவிருத்தி சங்கம் கம்பன் கலைக் கழகம் போன்றவற்றின் தலைவராகவும் காரைதீவு வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் உபசெயலாளராகவும் பிரதேச சிவில் பாதுகாப்பு குழு காரைதீவு கலாச்சார பேரவை இகிமி.பெண்கள் பாடசாலை அபிவிருத்திக் குழு செயற்குழு உறுப்பினராகவும் விபுலானந்த மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளராகவும் காரைதீவு பிரதேச சபையின் திட்டமிடல் குழுவின் கல்வி குழு தலைவராகவும் பணியாற்றி வந்தார்.

விபுலானந்த சர்வதேச கல்லூரியில் பணிப்பாளராக ஆங்கில பாடசாலையை நிறுவிய அவர் விபுலானந்த மொன்டிசோரி பணிப்பாளராககல்வி சேவை ஆற்றிவந்தார்.

தற்போது காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் விபுலானந்தா ஞாபகார்த்த மன்றம் மற்றும் காரைதீவு விளையாட்டு கழகம் மடத்தடி ஶ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம் போன்றவற்றிறன் ஆலோசகராகவும் மட். ஆசிரிய கலாசாலையின் 1991/92 புலன அணித் தலைவராகவும் பணியாற்றிவருகிறார்.

**அவரது சேவை மேலும் தொடர வாழ்த்துக்கள்.**

# 30 வீடு உடைத்து கொள்ளையிட்டுவந்த திருடன் கைது

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு வெலிகந்தை தொடக்கம் அக்கரைப்பற்று வரையான பிரதேசங்களில் 30 வீடு உடைப்பு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 28 வயதுடைய இளைஞன் ஒருவரை வாழைச்சேனையில் வைத்து சனிக்கிழமை (04) கைது செய்துள்ளதுடன் கொள்ளையிடப்பட்ட மடிகளணி மற்றும் தங்க ஆபரணங்களை மீட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த யூலை மற்றும் மே மாதங்களில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள திருகோணமலை வீதியிலும் கண்ணகி அம்மன் வீதியில் பூட்டிவிட்டு உறவினரது வீடுகளுக்கு சென்று இரண்டு 3 தினங்களில் வீடுகளுக்கு வந்தபோது வீட்டின் கதவை உடைத்து அங்கிருந்து மடிகளணி தங்க மோதிரம் , பணம், மற்றும் இலத்திரணியல் பொருட்கள் திருட்டுப்போயுள்ளது.

இது தொடர்பாக மட்டு தலைமையக பொலிஸ் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கஜநாயக்கா தலைமையில் இடம்பெற்றுவந்த விசாரணையின் அடிப்படையில் வாழைச்சேனை ஹாயிரா பள்ளி வீதியைச் சோந்த 28 வயதுடைய இளைஞனை நேற்று வீட்டில் வைத்து மடக்கிபிடித்து கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் வெலிகந்தை தொடக்கம் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலுள்ள பல பிரதேசங்களில் சுமார் 30 மேற்பட்ட வீடு உடைத்து கொள்ளையுடன் தொடர்புடையவர் எனவும் பல வழக்குகள் உள்ளதாகவும் பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இவரை நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக பொலிசர் தெரிவித்தனர்.

# மாணவர் பாராளுமன்ற அமர்வு






**(வாஸ் கூஞ்ஞ)**

2023 கல்வியாண்டுக்கான மன்னார் கல்வி வலய மாணவர் பாராளுமன்றம் திங்கள் கிழமை (06) மன்னார் கல்வி வலய மண்டபத்தில் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

இப்பாராளுமன்ற ஆரம்ப நிகழ்வாக சபாநாயகர் மற்றும் பிரதமர் ஆகியோர் வலயக் கல்விப் பணிப்பாளர் வலய மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் செல்வி ஜி.டீ.தேவராஜ் முன்னிலையில் சத்தியபிரமானம் செய்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து பாராளுமன்ற நடைமுறையின் பிரகாரம் செங்கோல் ஏந்தப்பட்ட நிலையில் சபாநாயகர் பாராளுமன்ற அமர்வுக்கு அழைத்து வரப்பட்டு சபாநாயகர் தலைமையில் பாராளுமன்றம் செயலமர்வு ஆரம்பித்ததும் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் சத்திய பிரமானம் செய்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து அமைச்சர்கள் பாராளுமன்ற அமர்வில் தங்கள் பகுதி மற்றும் பிரதேசங்களில் மாணவ சமூகத்துக்கு இடம்பெற்று வரும் குறைபாடுகளை சபையில் முன்வைத்தனர்.

இந்த பாராளுமன்ற அமர்வின்போது அழைக்கப்பட்டிருந்த விஷேட பிரதிநிதிகளான மன்னார் மாவட்ட ஓய்வு நிலை அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் , மன்னார் உதவி தேர்தல் ஆணையாளர் சிவராஜா , மன்னார் கல்வி வலயத்தின் கல்வி நிர்வாகத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.ஞானராஜ் , வலய பாராளுமன்ற இணைப்பாளர் எம்.பி.பிறின்ஸ் டயஸ் , கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட ஆசிரியர்களும் இவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் அமர்ந்து மாணவர் பாராளுமன்ற செயல் அமர்வை கண்டு கழித்தனர்.

இப்பாராளுமன்ற அமர்வில் மன்னார் கல்வி வலயத்திலுள்ள 55 பாடசாலை மாணவர்களில் 110 பேர் பங்கு பற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ‘கற்பனை ஓடங்கள்’ நூல் வெளியீடு





**( வாஸ் கூஞ்ஞ)**

பேசாலை அபிவிருத்தி குழுவின் உறுப்பினரும் கவிஞருமாகிய திரு ஜோன் பெல்கான் பறுனாந்து அவர்களின் எண்ணத்தில் உருவான ‘கற்பனை ஓடங்கள்’ என்னும் நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை (04) காலை 9 மணியளவில் பேசாலை மன்.சென்.மேரிஸ் வித்தியாலய சிசிலியா மண்டபத்தில் நடைபெற்றது.

பேசாலை அபிவிருத்திக்குழுத் தலைவரும் அதிபருமான எஸ்.இராஜேஸ்வரன் பச்சேக் (ராஜா மாஸ்ரர்) தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ் அமலமரித்தியாகிகள் குழுமத்தின் மாகாணத் தலைவர் அருட்பணி. செ.போல் ஜெயந்தன் பச்சேக் (அ.ம.தி) அடிகளார் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

இத்துடன் கௌரவ விருந்தினராக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினர்களாக பலரும் இதில் கலந்து கொண்டனர்.

வெளியீடு செய்யப்பட்ட முதல் பிரதியை யாழ் அமலமரித்தியாகிகள் குழுமத்தின் மாகாணத் தலைவர் அருட்பணி செ.போல் ஜெயந்தன் பச்சேக் (அ.ம.தி) அடிகளார் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்களுக்கு வழங்கி வைத்தார்.



# கல்முனையில் டிபி ஐடி கேம்பஸ் கல்வி சேவை விஸ்தரிப்பு

**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கையின் பிரபல்யமான டிபி கல்வி ஐடி கெம்பஸின்(DP Education IT Campus) கல்விச் சேவை கல்முனையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

குறித்த கல்வி நிலையம் தொடர்பான விளக்கம் அளிக்கும் ஊடகச் சந்திப்பும் அறிமுக நிகழ்வும் சாய்ந்தமருது டாக்டர் ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தென் கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் றஸ்மி ஆதம்பாவா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தம்மிக மற்றும் பிரிசிலா பெரேரா அறக்கட்டளை நிறுவனத்தின் கல்வி நிலைய செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

கல்முனை அல்ஹாமியா மற்றும் டாக்டர் ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை போன்றவற்றின் முழுமையான ஒத்துழைப்புடன் இந்த கல்வி செயறிட்டம் இலவசமாக மேற்கொள்ளப்பட இருக்கிறது. நிகழ்வில் டாக்டர் சனா ஜமால்டின் மற்றும் மறூஸ் ஜமால்டீன் ஆகியோர் திட்டங்கள் செயற்பாடு தொடர்பாக விளக்கமளித்தார்கள்.






அல்ஹாமியாவின் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் சிறப்பு உரையாற்றினார் .

முதல் கட்டமாக 25 லட்ச ரூபா பெறுமதியான புலமைப் பரிசில் 750 மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

## எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 18

# மனிதன் போன பாதையை மறந்து போகலாமா?

*மனம் போன போக்கிலே கால்கள் போகலாமா?*
*மனிதன் போன பாதையை மறந்து போகலாமா?*

வனங்களிலும், குகைகளிலும் மிருகங்களைப் போல் வாழ்ந்த மனிதன் நதிக்கரையோரங்களை அண்டி நிலையான வாழ்க்கை வாழப் பழகியதில் இருந்து ஒழுக்க விழுமியங்களையும் பழக்க வழக்கங்களையும் தமக்கென வகுத்துக் கொண்டான். அன்றிலிருந்து இன்றுவரை கோட்பாடுகள், கொள்கைகள், மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் என ஒவ்வொன்றும் இனம், மதம், மொழிசார் குழுமங்களுக்கிடையே பின்னிப் பிணைந்தனவாகப் பேணப்பட்டு வருகின்றன. அவற்றுள் சில இனம், மதக் குழுமங்கள் பலவற்றிடையே இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டும் வருகின்றன. மனிதனும் வகுக்கப்பட்டதன் அடிப்படையிலும் பலர் அதனைப் புறந்தள்ளியும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வாழ்க்கைப் பயணம் என்பது கரடு முரடானது. மேடு, பள்ளம், எதிர்ப்புகள், சவால்கள், இன்பம், துன்பம், கஷ்டம், நஷ்டம், சறுக்கல்கள், வீழ்த்துதல்கள், பின்வாங்குதல், மீண்டும் எழுந்து நடத்தல் எனப் பல்வேறு படிகளைக் கொண்டது. பயணம் எழிதென நினைத்து முயற்சி, நம்பிக்கையோடு பயணித்தால் வெற்றி நமதாகும். இல்லையெனில் தோல்வி நம்மை வந்து சேரும்.

### மனம் போன போக்கில் போகலாமா?

மனம் ஒரு குரங்கு போன்றது. அது என்றும் எப்போதும் அலைமோதிக் கொண்டே இருக்கும். மனமும் புத்தியும் எப்போதும் ஏதோ ஒன்றை நினைத்தவாறே செயற்பட்டுக் கொண்டிருக்கும். சித்தத்தை அடக்கியவன் ஞானி. சித்தத்தை அடக்க முடியாதவர்கள் மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். இவர்களில் பலர் வாழ்க்கையில் பெரும்பாலும் துன்ப, துயரங்களை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களில் பெரும்பாலானோர் வாழ்க்கையில் தோல்விகளைச் சந்தித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் அவற்றில் இருந்து விடுபட்டு முயற்சி, தன்னம்பிக்கையோடு தனக்கான வாழ்க்கை வாழும் போதுதான் அவர்களின் வாழ்க்கையும் அர்த்தமுள்ளதாக மாறும். தமக்கென்றொரு வாழக்கையை வகுக்காமல் மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் பலர் தானும் வாழ மாட்டார்கள். மற்றவர்களையும் வாழ விடமாட்டார்கள். நாம் வாழும் வாழ்க்கை நம்மால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதாக இருக்க வேண்டும். இன்னொருவரை நம்பியோ அவருக்காகவோ உருவாக்கப்பட்டதாக இருக்கக் கூடாது. அது மனித வாழ்க்கைக்கு அடையாளமாகவும், ஆதாரமாகவும் அமைதல் வேண்டும். அந்த வாழ்க்கை வாழ்க்கையின் தத்துவங்களையும் சூட்சுமங்களையும் புரிந்து கொண்டு வாழ்வதாக இருத்தல் வேண்டும்.

மனதின் ஆளுகைக்கு உட்பட்டுப் போன போக்கில் செயற்படுவதனால் வாழ்க்கையில் எதனையும் சாதிக்க முடியாது. அறிவுக்கும் மனதுக்கும் இடையில் சமநிலையைப் பேண வேண்டும். சமநிலை குளம்பும் போது பதட்டம் ஏற்படும். பதட்டத்தினால் எந்தச் செயலையும் சிறப்பாகச் செய்ய முடியாத நிலை ஏற்படும். அதனால் வாழ்க்கையில் பல சங்கடங்களையும் தோல்விகளையும் சந்திக்க நேரிடும். அப்போது சுய ஒழுக்கம், சுய கட்டுப்பாடு, மனவடக்கம் பேணல் அவசியமாகின்றது. மனதை அலையவிட்டுக் கொண்டு சந்தோசமாக வாழ முடியாது. அவர் கூறுகிறார், இவர் கூறுகிறார். அவர் அப்படிச் செல்லுகிறார் என்று அவர்களுக்காக, அவர்களின் சொற்படி வாழ்வதெல்லாம் வாழ்க்கை ஆக முடியாது. மனதை ஒரு நிலப்படுத்தி, சுய ஒழுக்கத்துடன் வாழ்க்கைக்குத் தேவையான சிறந்த தீர்மானங்களை எடுத்து வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். அவற்றுள் சிறந்ததைத் தெரிவு செய்து முதலில் செயற்படுத்த வேண்டும். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்' என்பார்கள். மனதைக் கட்டுப்படுத்தி நாம் சுமக்கக்கூடியது, நம்மால் செய்யக்கூடியவற்றை மாத்திரம் தெரிவு செய்து செயலில் இறங்க வேண்டும். செயலைத் தொடங்குவதும் முடிப்பதும் நாமாகவே இருத்தல் வேண்டும். மனம் நமது ஆளுகைக்குள் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும். அதில்தான் நமது வெற்றி தங்கியுள்ளது.

### கால் போன போக்கில் மனிதன் போகலாமா?

உடல் உறுப்புக்கள் இச்சைவழிச் செயற்பட்டினையும் கட்டளை வழிச் செயற்பட்டினையும் நிறைவேற்றுகின்றன. உடலின் உள்ளுறுப்புக்களின் செயற்பாடுகளில் பெரும்பாலும் இச்சைவழிச் செயற்பாட்டின்படியே இயங்கிக் கொண்டிருக்கின்றன. புற உறுப்புக்களின் பெரும்பாலான செயற்பாடுகள் மனம், மூளை ஆகியவற்றின் கட்டளைவழிச் செயற்பாடாகவே அமைகின்றன. மனதின் ஓட்டத்திற்கு ஏற்ப மூளையும் மூளையின் ஓட்டத்திற்கு ஏற்ப மனமும் செயலாற்றிக் கொண்டிருக்கும். இவை யாவும் நரம்பு மண்டலத்தின் கணத்தாக்கங்களுக்கூடாகவும் உடல் உறுப்புக்களின் தொகுதிகளுக்கூடாகவும் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும். உடலின் செயற்பாடுகள் மனம், மூளையினால் திட்டமிடப்பட்டும், திட்டமிடப்படாமலும் கணத்தாக்கங்கள் ஊடாக நிறைவேற்றப்படுகின்றன. உடலின் புற உறுப்புக்களின் செயற்பாடுகளுக்கு மனம், மூளை ஆகியன காரணமாக இருக்கின்றன. இவ்வுறுப்புக்கள் செயல் ஒன்று நடைபெறுவதற்கு வெறும் கருவியாக மாத்திரம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது புற உடல் உறுப்புக்களைக் குற்றம் சாட்ட முடியாது.



உடல் உறுப்பாகிய கால், கைகள் ஆகியன செயற்படுவதற்கு நரம்பு மண்டலமும், தசைகளும் காரணமாக இருக்கின்றன. அவற்றுக்குரிய கட்டளைகளை மனம், மூளை இரண்டும் நரம்பு மண்டலத்துக்கூடாக பிறப்பிக்கின்றன. தசையும் எலும்பும் சேர்ந்து செயலைச் செய்து முடிக்கின்றன. பழக்கப்பட்ட வழக்கமான செயற்பாடுகள் மனம், மூளை ஆகியவற்றின கட்டளையின்றி தினமும் உடல் உறுப்புகளுக்கூடாக இச்சைவழிச் செயற்பாடாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும். உடல் உறுப்புக்களின் பல செயற்பாடுகள் ஒரே நேரத்தில் பல தொகுதிகளுக்கூடாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும். இவற்றுக்காகப் பல துணை உறுப்புக்களுக்கும் மனம், மூளையினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கும். கைகள் செய்வதும், கால்கள் நடப்பதும் கட்டளைவழிச் செயற்பாடாகும். மனமும் மூளையும் இணைந்து கட்டளை பிறப்பிக்காமல் கால்கள் நடப்பதில்லை. மனிதன் நடக்கும்போது கால்கள் தொழிற்படுவது மனதினதும் மூளையினதும் கட்டளையை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளே தவிர கால்களின் சுயமான செயற்பாடுகள் அல்ல. கால் போன போக்கில் மனிதன் செல்வதாக இருந்தால் மனமும் மூளையும் செயற்படாமல் அல்லது கட்டுப்படுத்தாமல் இருக்க வேண்டும். இதில் ஒன்று அமைதியாக இருக்கும்போத இன்னொன்று தொழிற்பட்டுக் கொண்டிருக்கும். அப்போதுதான் கால்போன போக்கில் மனிதனால் செல்ல முடியும். கால் போன போக்கில் மனிதன் செல்கின்றான் என்றால் மனதினதோ அல்லது மூளையினதோ கட்டளைக்குக் கட்டுப்பட்டே சென்றிருப்பான்.

முன்னோர் சொன்ன பாதையின்படி பயணிப்போம்.

வாழ்வாங்கு வாழ்வது பற்றி நமது முன்னோர் பல வழிகளை, நெறிமுறைகளைக் கூறிச் சென்றிருக்கிறார்கள். அதன்படியே பலரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வாழ்க்கையில் இவ்வாறுதான் வாழ வேண்டும். எவ்வாறெல்லாம் வாழக்கூடாது என்பதைப் புராண, இதிகாசங்கள், வேதாந்தம், சங்க நூல்கள், திருமறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சட்டங்கள், வாழ்வியல் தத்துவங்கள், மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள், நெறிமுறைகள் என்பவற்றுக்கூடாகக் கூறிச் சென்றிருக்கின்றனர். வாழ்க்கை என்பது நாம் நினைத்தது போல் அமைவதுமில்லை. நினைத்ததெல்லாம் நடப்பதுமில்லை. ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் இயற்கை வழிவிட்டுக் கொண்டு நடக்க வேண்டியது நடந்த கொண்டே இருக்கும். 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது' 'எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்' இதுவே கீதா சாரமாகும்.

நீதி நெறிமுறைகளோடு கூடிய வகையில் ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடித்து நமது முன்னோர் பயணித்த பாதையைக் கடைப்பிடித்து, ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்க்கையை வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகும். வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நடைமுறைகள், நீதி, நேர்மை, மனித வாழ்க்கை விழுமியங்கள், குடும்ப வாழ்க்கை முறைகள், ஒழுக்கம், கட்டுப்பாடு, பிரச்சினைகள், சவால்களை எதிர் கொண்டு வாழ்தல், இணைந்து வாழ்தல், அர்ப்பணிப்பு, சகிப்புத் தன்மை, பொறுமை, நேர்மை, ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, பண்பாடு, பழக்க வழக்கம், மரபுகள், சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் கைக் கொண்டு நமது முன்னோரில் பலர் வாழ்ந்து காட்டி இருக்கின்றார்கள். 'வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி' என்பது போல் வாழ்க்கையை ரசித்து, ருசித்து கண்டதற்கெல்லாம் ஆசைப்படாமல் இருப்பதைக் கொண்டு வாழ்ந்து காட்டி இருக்கின்றார்கள். பெரும்பாலும் வரவுக்கு மீறிச் செலவு செய்யாமல் 'விரலுக்கு ஏற்றதுதான் வீக்கம்' என்பது போல் வாழ்க்கையை வாழ்ந்திருக்கின்றனர். எத்தனை வசதி இருந்தும் பணம்படைத்தவர்கள் கூட வாழ்க்கைச் செலவினைக் கட்டுக் கோப்புக்குள் வைத்திருந்தனர். ஆடம்பரமான வீணாண செலவுகள் செய்யாமல் கைக்கடக்கமாக வாழ்ந்து சென்றனர். முடிந்தவரை கடன் வாங்கி வாழ்வதைத் தவித்துக் கொண்டனர்.

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பதற்கிணங்க ஒற்றுமையாக வாழ்வதையே விரும்பினர். வீட்டு நிகழ்வுகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், நல்லநாள், பெருநாள் என்பவற்றில் ஊர் கூடிநின்று கருமங்களைச் செய்து முடிப்பார்கள். அந்தக் காலத்தில் வீடுகளில் நடைபெறும் சடங்குகள், சம்பிரதாயங்கள் ஊர் ஒற்றுமையின் அடையாளமாகத் திகழும். ஊர்ப் பெரியவர், வீட்டுத் தலைவர், நல்லவர், பெரியவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் வழங்குவார்கள். பண்டிகை காலங்களில் கிராமிய விளையாட்டுக்களை ஊர்கூடி ஒற்றுமையோடு நடாத்தி முடிப்பார்கள். முன்னோர் வகுத்த நடைமுறைகள், மரபுகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றை இறுக்கமாகக் கடைப் பிடித்தனர். குற்றமிழைத்தவர்களுக்குப் பெரும்பாலும் ஊர்ப் பெரியவரே தண்டனை வழங்கினார். விருந்துபசாரங்களில் பந்தி போட்டு வீட்டில் சமைத்த உணவினையே வழங்கினார்கள். வீட்டுச் சமையல் உடல் ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் பக்குவமாகச் சமைத்துக் கொடுத்தார்கள். நோய், நொடிகளுக்கு முடிந்தவரை கைமருந்தினையே வழங்கினார்கள்.

முன்பெல்லாம் ஊரும் வீடும் அமைதியாக இருந்தது. இருப்பதை வைத்துச் செலவு செய்து வாழந்தமையால் வீடுகளில் சந்தோசமும் மகிழ்ச்சியும் நிலவின. அடக்கம், ஒழுக்கம், கீழ்ப்பணிவு, மதிப்பு, மரியாதை ஆகியவற்றைப் கடைப்பிடித்து வந்தனர். 1983 இன் பின்னர் உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்தமையால் நெருக்கீடும் கட்டுப்பாடுகளும் அதிகரித்தன. யுத்தப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களிடத்தில் யுத்த சூழலை ஒட்டிய கலாசாரமொன்று உதயமானது. மக்களும் அந்தக் கட்டுப்பாடுகளுக்குள் வாழப் பழகிக் கொண்டனர். சில பிரதேசங்களுக்குள் மக்கள் முடக்கப்பட்டனர். அதற்கும் பழக்கப்பட்டார்கள். 2009 மே 19 இல் யுத்தம் மௌனிக்கப்பட்டதில் இருந்து நெருக்கீடுகளும் கட்டுப்பாடுகளும் படிப்படியாகத் தளர்ந்தன. இடப்பெயர்வு, அகதி வாழ்க்கை, விசாரணை, காணாமல் போதல், சிறை வாழ்க்கை என்பவற்றில் இருந்து விடுபட்டு புனர்வாழ்வு, மீழ்குடியேற்றம், புனர் நிர்மானம், புதிய வாழ்க்கை முறை ஆகியவற்றையும் அனுசரித்து வாழப் பழகிக் கொண்டனர். நெருக்கீடு, கட்டுப்பாடுகள் என்பவற்றுக்குள் வாழ்ந்து பழக்கப்பட்ட மக்களுக்கு இப்புதிய வாழ்கை முறை நடைமுறை வாழ்க்கையில்யில் பல மாற்றங்களை ஏற்படுத்தின. இந்த வாழ்க்கை முறையின் கட்டுப்பாடற்ற போக்குகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் பலரின் சமூகச் சீரழிவுகளுக்கும் வழி சமைத்துக் கொடுத்தன.

பெரும்பாலானோர் நமது முன்னோர் வாழந்து காட்டிய வாழ்க்கை முறையை மறந்துவிட்டனர். கொலை, கொள்ளை, வழிப்பறி, களவு, சண்டை, சச்சரவு, வாள்வெட்டு, கற்பழிப்பு, பாலியல் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகம், கஞ்சா, போதைப் பொருள் கடத்தல், போதைப் பொருள் பாவனை, தற்கொலை, குடும்பப் பிணக்குகள், குடும்பச் சீரழிவுகள் எனத் நமது பாரம்பரிய கலாசாரத்திற்குப் பிழ்வான நடத்தைக் கோலங்கள் நாளுக்க நாள் பல்கிப் பெருகிக் கொண்டே செல்கின்றன. இதனை ஊக்குவிக்கும் வகையில் அரசு சார்ந்தவர்கள் இரகசியமாகச் சில முன்னெடுப்புக்களை மேற்கொண்டு மௌனாயுத யுத்தம் நடத்திக் கொண்டிருக்கின்றனர். இதனைக் கவனத்தில் கொள்ளாமல் இந்து ஆலயங்களில் புனரமைப்பதும், இருப்பதை இடித்துப் புதிது புதிதாகக் கட்டுவதும், கும்பாவிசேகம், சங்காபிசேகம், திருவிழாக்கள், விழாக்கள், விசேட பூசை, புணஸ்காரங்கள் ஆகியவற்றை நடாத்தி காலத்தையும், நேரத்தையும், பணத்தையும் விரயம் செய்து கொண்டிருக்கின்றனர். இந்தக் காலம், நேரம், பணத்தைச் செலவிட்டு பிறழ்வான நடத்தையில் ஈடுபட்டுக் டகாண்டிருப்பவர்களை திருத்திப் பனர்வாழ்வளிக்கும் பணியில் ஈடுபடலாம். காலத்துக்குத் தேவையான சமூக நல்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டுச் சமூகத்தை நல்வழிப்படுத்துவதை விடுத்து, தமது சமூகக் கடமையை மறந்து இன்றும்கூட மரபுசார் பணிகளில் ஈடுபட்டு காலம், நெரம், பணம் ஆகியவற்றை விரயம் செய்து கொண்டிருக்கின்றன. ஆலயத் தர்மகத்தாக்கள் காலத்துக்கு ஏற்ப, ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சமூகச் சீரழிவுகளை உணர்ந்து கேள்விக் குறியாகிக் கொண்டிருக்கும் தமிழர்களின் கலாசாரத்தை பாதுகாக்க முன்வருவார்களா?.

பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இளைஞர், யுவதிகளை நல்வழிப்படுத்துகின்ற பாரிய பொறுப்பு ஆலயங்களுக்கு இருக்கிறது. திருவந்ளுவர் 'படமாடும் போயில் நடமாடும் கோயில்' எனத் திருமந்திரப் பாடலடியில் கூறியது 'ஓர் ஆலயம் ஓரிடத்தில் இருந்த கொண்டு ஆலய நிர்வாகக் கட்டமைப்புக்கூடாக சமூகப் பணியாற்ற வேண்டும்' எனக் குறிப்பிட்டதோடு அவ்வாறு பணியாற்றாத ஆலயங்கள், ஆலயங்களாக இலுக்க முடியாது எனக் கூறுகின்றார். இதனைச் செயற்படுத்த மறந்த நிலையிலேயே 90 வீதத்துக்கு மேற்பட்ட ஆலயங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நமது முன்னோர் வாழந்து காட்டிய பாதையை மறந்



து, விதண்டா வாதம் செய்து கொண்டு பலர் சமூகத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கின்றனர். வாழ்க்கைத் தத்துவத்தையும் நெறிமுறைகளையும் அனுசரித்து இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை மறந்து எப்படியும் வாழலாம் எனச் சமூகத்தின் பாரம்பரிய போக்கை மாற்றிக் கொண்டிருக்கின்றனர். இதற்குத் திறன் அலைபேசிகளும், இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களும், செயலிகளும், செயற்கைத் தொழினுட்பமும் (Artificial Intellegence) பலரைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டிருக்கின்றன. அதிலிருந்து மீள முடியாத நிலையில் அவர்களில் பலர் அடிமையாகிக் கொண்டிருக்கின்றனர். சமூக வலைத்தளங்களும் திறன் அலைபேசிகளும் பல சமூகச் சீரழிவுகளுக்குக் காரணமாக இருக்கின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டிய அரச இயந்திரம் கண்டும் காணாதது பொல் மௌனமாக இருக்கிறத. 'திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்பது போல் அவரகளும் சமூகமும் ஆலய பரிபாலன சபையினரும் திருந்தா விட்டால் எதனையும் மாற்றி அமைக்க முடியாது. நல்ல மனிதர்களை, நல்ல பண்பாளர்களை உருவாக்குவதில் சகலரினதும் ஒன்றிணைந்த பங்களிப்ப அவசியமாகின்றது என்பதை மறந்துவிடலாகாது. ஆலயங்கள் யாவும் வெறுமனே பூசை, விழாக்கள் செய்வதுடன் வெள்ளிக் கிழமைகளில் பள்ளிவாசல்களில் கொத்வாப் பிரசங்கம் செய்வது போல், ஞாயிற்றுக் கிழமைகளில் கிருஸ்த்தவ தேவாலயங்களில் சமய ஆராதனைகளும் பிரசங்கங்களும் செய்வது பொல் இந்து ஆலயங்களும் வாரத்தில் ஒரு தினத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு மேற்கொள்வது சிறந்த மார்க்கமாகவும் அமையும்.

*துன்பத்தைக் கண்டு துவண்டு நின்றால்*
*வாழ்க்கையில் நிலைத்திருக்க முடியாது*
*நிமிர்ந்து நின்று துணிந்து முயற்சித்தால்*
*நினைத்தது யாவும் நம்மை வந்து சேரும்*

**மனிதன் போன பாதை தொடரும்..**



சின்னத்தம்பி குருபரன்

# அரபு நாடுகளின் இஸ்ரேலுடனான ஒப்பந்தங்கள் பாலஸ்தீனத்தை சிதைக்கும் அகண்ட இஸ்ரேல் திட்டம்

*(அரபு நாடுகளான எகிப்து, ஜோர்டான், பின்னர் அரபு எமிரேட்ஸ் இஸ்ரேலுடன் செய்த அமைதி ஒப்பந்தங்களால், சமாதானத்தை பேணுவதாக இஸ்ரேல் வெளி உலகிற்கு காட்டிக் கொண்டாலும், சிறிது சிறிதாக பாலஸ்தீன தாயகம் சிதைக்கப்பட்டது என்பதே உண்மையாகும். இந்த உடன்படிக்கைகளின் மூலமே அகண்ட இஸ்ரேல் திட்டத்தை விரிவாக்கி வருகிறது)*

நீண்டகால பகைமை கொண்ட பாலஸ்தீன - இஸ்ரேல் முரண்பாடு மேலும் வலுவாகி, தற்போது

பல்லாயிரம் மக்கள் கொல்லப்பட்டு, தீவிரமான முற்றுகைப் போர் காசாவில் நடைபெறுகிறது. பாலஸ்தீனத்தை சிதைத்து அகண்ட இஸ்ரேல் திட்டத்தை விரிவுபடுத்த இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

இந்த அகண்ட இஸ்ரேல் திட்டத்தை விரிவாக்கத்தில் அரபு நாடுகள் இஸ்ரேலுடன் செய்த அமைதி ஒப்பந்தங்களால், பாலஸ்தீன தாயகம் பறிபோகிறதா என்ற கருத்தும் வெளியாகி உள்ளது. உண்மையில் அரபு நாடுகளுடன் சமாதானத்தை பேணுவதாக இஸ்ரேல் வெளி உலகிற்கு காட்டிக் கொண்டாலும், சிறிது சிறிதாக பாலஸ்தீன தாயகம் சிதைக்கப்பட்டது என்பதே உண்மையாகும்.



## எகிப்து - இஸ்ரேல் அமைதி ஒப்பந்தம்:

1977 ஆம் ஆண்டு எகிப்து ஜனாதிபதி அன்வர் சதாத் இஸ்ரேலுக்கு விஜயம் செய்த 16 மாதங்களுக்குப் பின்னர், தீவிர பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே 26 மார்ச் 1979இல் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாக பரஸ்பர அங்கீகாரம், சூயஸ் கால்வாய் வழியாக இஸ்ரேலியக் கப்பல்களை இலவசமாகச் செல்வதற்கும், 1967ல் எகிப்தால் தடைசெய்யப்பட்ட திரான் மற்றும் அகாபா வளைகுடாவை சர்வதேச நீர்வழிப் பாதைகளாக திறந்து அங்கீகரிப்பதற்கும் வழி கோலப்பட்டது.

1948 அரபு-இஸ்ரேல் போருக்குப் பிறகு இருந்த போர் நிலையை நிறுத்துதல், இருதரப்பு உறவுகளை இயல்பாக்குதல் மற்றும் இஸ்ரேல் கைப்பற்றிய சினாய் தீபகற்பத்தில் இருந்து தனது ஆயுதப்படைகளை இஸ்ரேல் திரும்பப் பெறுதல்.

1967 இல் ஆறு நாள் போரின் போது. எகிப்து சினாய் தீபகற்பத்தை இராணுவ மயமாக்கப்பட்டதை விட்டு வெளியேற ஒப்புக்கொண்டது. இஸ்ரேலிய ஆக்கிரமிக்




கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் பிரதேசங்களில் பாலஸ்தீனிய குடிமக்களுக்கு முழு சுயாட்சியை நிறுவ இந்த ஒப்பந்தம் வரையப்பட்டது.

## ஜோர்டான் - இஸ்ரேல் சமாதான உடன்படிக்கை:

எகிப்துக்குப் பிறகு இஸ்ரேலுடன் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இரண்டாவது அரபு நாடு ஜோர்டான் ஆகும். 26 அக்டோபர் 1994 இல், ஜோர்டானும் இஸ்ரேலும் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டன.

இஸ்ரேல் பிரதம மந்திரி ராபின் மற்றும் ஜோர்டான் பிரதம மந்திரி அப்தெல்சலாம் அல்-மஜாலி இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இஸ்ரேல் ஜனாதிபதி எஸர் வெய்ஸ்மான் ஜோர்டான் மன்னர் ஹுசைனுடன் கைகுலுக்கினர். அன்றைய அமெரிக்க தலைவர் பில் கிளின்டன், வெளியுறவுத் துறை செயலர் வாரன் கிறிஸ்டோபருடன் கலந்து கொண்டனர்.

முதலில் 1987 இல் இஸ்ரேலிய வெளியுறவு மந்திரி ஷிமோன் பெரஸ் மற்றும் ஜோர்டான் மன்னர் ஹுசைன் ஆகியோர் ஒரு சமாதான உடன்படிக்கைக்கு இரகசியமாக முயற்சி செய்தனர். அதில் இஸ்ரேல் மேற்குக் கரையை ஜோர்டானிடம் ஒப்படைக்க முனைந்தது. மத்திய கிழக்கு அமைதி மாநாட்டிற்கான கட்டமைப்பை வரையறுக்கும் ஒப்பந்தத்தில் இரு அரசும் கையெழுத்திட்டன.

இதனால் இஸ்ரேலுக்கும் பிஎல்ஓவிற்கும் இடையே அமைதியான ஒஸ்லோ தீர்மானத்திற்கு ஆதரவாக மேற்குக் கரை மீதான தனது உரிமையை இஸ்ரேல் கைவிட்டது. இதற்காக 1994 இல் எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக் மற்றும் சிரிய அதிபர் ஹபீஸ் அல்-அசாத் ஆகியோருடன் ஹுசைன் ஆலோசனை நடத்தினர்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் மன்னர் ஹுசைனை சமாதான பேச்சுவார்த்தைகளை தொடங்கவும் இஸ்ரேலுடன் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடவும் அழுத்தம் கொடுத்தார் என்பதும் உண்மையே. அத்துடன் ஜோர்டானின் கடன்கள் மன்னிக்கப்படும் என்று அவருக்கு உறுதியளித்தார்.

இம்முயற்சிகளின் வெற்றியினால், ஜோர்டான் இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

இஸ்ரேலும் ஜோர்டானும் உத்தியோகபூர்வ பகைமை நிலையை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டதாகவும், இரத்தம் சிந்துவதற்கும் துயரத்திற்கும் ஒரு நியாயமான மற்றும் நீடித்த அமைதியை அடைவதற்காக பேச்சுவார்த்தைகளை தொடங்கும் என்றும் பிரகடனம் செய்தனர்.

இந்த ஒப்பந்தத்தை எகிப்து வரவேற்றது, ஆயினும் சிரியா அதை புறக்கணித்தது. லெபனான் போராளிக் குழுவான ஹெஸ்பொல்லா உடன்படிக்கையை முழுமையாக எதிர்த்தது.

## இஸ்ரேல்- ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அமைதி ஒப்பந்தம்:

2020 செப்டம்பரில் இஸ்ரேல்- ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE) இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. முன்பு 1979ல் எகிப்தும், 1994ல் ஜோர்டானும் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டன. அக்காலத்தில் இஸ்ரேலுடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தொடர்ந்து பகைமை போக்கையே கொண்டிருந்தது.


இஸ்ரேல் 1948ம் ஆண்டு தனி நாடாக அறிவிக்கப்பட்டதன் பின், அப்பிராந்தியத்தில் உள்ள பாலஸ்தீனம், லெபனான், எகிப்து, ஜோர்டான், ஈராக் உள்ளிட்ட அரபு நாடுகள் இஸ்ரேலை தனி நாடாக ஏற்கவில்லை. இஸ்ரேல் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையில், பாலஸ்தீனத்திற்கு ஆதரவான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இஸ்ரேலை எதிரி நாடாக, நீண்டகால விரோதிகளாக இருந்து வந்த இவ்விரு நாடுகளுக்கும் இடையே, சமரச முயற்சியால் 2020இல் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.

இதன் மூலம், இருநாடுகளுக்கும் இடையே தூதரக, வர்த்தக உறவுகள் ஏற்பட்டன. இதன் பின்னர், பாலஸ்தீனத்தை ஒட்டியுள்ள மேற்கு கரை பகுதியை தனது நாட்டுடன் இணைக்கும் திட்டத்தை கைவிடுவதாக இஸ்ரேல் அறிவித்தது.

## ஈரானை தனிமைப்படுத்தும் திட்டம்:

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்காவின் நீண்டகால எதிரியான ஈரானை தனிமைப்படுத்த தனது நட்பு நாடுகளை அமெரிக்கா ஓரணியில் திரட்ட இன்னமும் முயற்சிக்கிறது. இதன் காரணமாக மத்திய கிழக்கில் ஆதிக்கம் செலுத்தும் ஈரானின் பலம் குறைய வாய்ப்புள்ளதாக ஊகிக்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்திற்கு ஈரான், துருக்கி, பாலஸ்தீனம்



எதிர்ப்பை தெரிவித்தன. இஸ்ரேலுடனான எந்தவொரு அரபு நாடும் இஸ்ரேலுடன் செய்து கொள்ளும் எந்த ஒப்பந்தமும் இறுதியில் அந்த நாட்டுக்கே அச்சுறுத்தலாக அமையும். இஸ்ரேலை அங்கீகரிக்கும் அரபு நாடுகளுக்கு அழிவே மிச்சமாகும் என தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் அரபு நாடுகளின் உறவை நாடியதன் மூல காரணம், ஈரானுக்கு அருகில் ஒரு இராணுவ மற்றும் பொருளாதார மையம் ஒன்றை அமெரிக்கா சார்பாக அமைப்பதேயாகும். இதன்மூலம் அரபு நாட்டை ஈரானுக்கு எதிரான ஒரு தளமாக பயன்படுத்த முயல்வார்கள்.

இந்த விரிவாக்கத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஒரு அகண்ட இஸ்ரேலை உருவாக்குவது தான்.

2020 செப்டம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னிலையில் வெள்ளை மாளிகையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இதற்கு அரபு எமிரேட்ஸ், பஹ்ரைனியர்கள் இத்திட்டத்திற்கான உதிரிகளாக பயன்படுத்தப்பட்டனர்.

இஸ்ரேலுடனான இந்த ஒப்பந்தங்களில் சவூதி அரேபியாவின் நெருங்கிய நட்பு நாடுகளான எமிரேட்ஸும் பஹ்ரைனும் கையெழுத்திட்டிருக்கின்றன. இதன் போது, 30 ஆண்டுகளுக்கும் மேலாக வாஷிங்டனுக்கான சவூதி தூதராக பணியாற்றிய இளவரசர் பந்தர் பின் சுல்தான், பலஸ்தீனிய தலைவர்கள் இஸ்ரேலிய ஆட்சியுடன் தீர்வு காணும் வாய்ப்புகளை தவற விட்டு, தொடர்ந்து தோல்வி கண்டு வருகின்றனர் என்று குறிப்பிட்டிருந்தார்.

## பாலஸ்தீன - இஸ்ரேல் ஒஸ்லோ உடன்படிக்கை தோல்வி:

பாலஸ்தீனிய விடுதலை (PLO) அமைப்புக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் 1993 இல் ஒஸ்லோவில் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாலஸ்தீனிய அதிகார சபை உருவாகியது. ஆயினும் ஒஸ்லோ சமாதான முன்னெடுப்பு உரிய முறையில் செயல்படுத்தப்படாததால் யூத குடியேற்றங்களின் விரிவாக்கத்தை தடுத்து நிறுத்தத் தவறி விட்டமை பின்னர் நிரூபிக்கப்பட்டது.

இந்த ஒஸ்லோ உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த நாள் முதல் பாலஸ்தீனர்களுக்கு தோல்வியாகவே இருந்தது. ஏனெனில் இது ஒரு அரசியல் ஒப்பந்தம் அல்ல, ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் மாத்திரமேயாகும் என ஒஸ்லோ உடன்படிக்கையை வடிவமைத்த அபு மஸென், முன்னைய பாலஸ்தீனிய அதிகார சபையின் தலைவர் அறிவித்தார்.

பாலஸ்தீன பகுதியை ஆக்கிரமிக்கும் யூத தீவிரவாதிகள் தங்கள் மூதாதையர்கள் வசித்த நிலங்களுக்குத் திரும்புவதாகக் கூறுகின்றனர்.

அந்நிலம், அவர்களுக்கு நீண்ட காலத்திற்கு முன்பே பாலஸ்தீனர்க்கு சொந்தமானது. யூதர்கள் ஐரோப்பாவிலிருந்து இடம்பெயர்ந்து வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே அந்நிலத்துக்கு சொந்தக்காரர்களான பாலஸ்தீனியர்கள் இந்த மண்ணின் சொந்தக்காரர்கள்.

சர்வதேச உலக சாட்சியத்துடன் உருவான ஒஸ்லோ உடன்படிக்கையின் அடிப்படையில் கூட இஸ்ரேல் அது அமைதியைப் பின்தொடரும் ஒரு ஆட்சி அல்ல என்பதை நிரூபித்து விட்டது. இதற்கு திட்டமிட்ட யூத குடியேற்றங்களின் விரிவாக்கமே முக்கிய காரணமாகும்.

## பிரதமர் இட்ஷாக் ராபின் படுகொலை:

ஒஸ்லோ உடன்படிக்கையை உருவாக்கிய இஸ்ரேல் பிரதமர் இட்ஷாக் ராபினும் பலஸ்தீன் விடுதலை இயக்க தலைவர் யாஸிர் அரபாத்தும் மரணித்ததோடு ஒஸ்லோ உடன்படிக்கையும் உயிரிழந்து விட்டதாகவே கருதப்படுகிறது.

யூத இனவாத வன்முறைக்கு ஒஸ்லோ உடன்படிக்கையை உருவாக்கிய இஸ்ரேல் பிரதமர் ராபின் 1995 இல் ஒரு இஸ்ரேலிய தீவிர தேசியவாதியால் படுகொலை செய்யப்பட்டார்.

2004இல் அரபாத்தின் மரணம் இஸ்ரேலிய உளவு அமைப்பால் நஞ்சூட்டப்பட்டதால் ஏற்பட்டது என்றும் சிலர் குற்றம் சாட்டினர்.

சியோனிச இயக்கத்தின் பாரிய பலத்தின் மூலம் அச்சுறுத்தி காரியம் சாதிக்கும் வகையில் பாலஸ்தீன மண்ணை முழுமையாக அபகரிக்கின்றது.

இஸ்ரேல் மனித உரிமைகளையோ அல்லது சர்வதேச சட்டத்தின் விதிமுறைகளையோ மதிக்கும் ஒரு அரசல்ல, பலத்தைக் கொண்டு எதுவும் செய்யலாம் என்பதற்கு தற்போது நிகழும் காசா படுகொலைகள் சான்று பகர்கின்றது.

அரபு நாடுகளான எகிப்து, ஜோர்டான், பின்னர் அரபு எமிரேட்ஸ் இஸ்ரேலுடன் செய்த அமைதி ஒப்பந்தங்களால், சமாதானத்தை பேணுவதாக இஸ்ரேல் வெளி உலகிற்கு காட்டிக் கொண்டாலும், சிறிது சிறிதாக பாலஸ்தீன தாயகம் சிதைக்கப்பட்டது என்பதே உண்மையாகும்.





ஐங்கரன் விக்கினேஸ்வரா

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 35

# பாரம்பரிய வாத்திய இசைக் கலைஞர் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் சாதனை கலைப் பயணம்

பாரம்பரியமிக்க தமிழ் கிராமமான தம்பலகாமத்தில் சுப்பிரமணியம் வள்ளித்தங்கம் தம்பதிகளுக்கு மகனாக 1954ஆம் ஆண்டு பிறந்தவர் நமது கலைஞர் சு.இரத்தினசிங்கம். தம்பலகாமத்தின் மாக்கைத்திடலை பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் பாடசாலைக் கல்வியை திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் பயின்றவர். இவரது மனைவி தங்கமலர். இவரது பாடசாலைக் காலத்தில் அங்கு சமயப் பாட ஆசிரியராக கடமையாற்றிய சாம்பசிவம் ஐயா மூலமாக திருகோணமலை சிவயோக சமாஜத்தில் இடம்பெறும் நாடகங்கள், பஜணை, கோலாட்டம், கதாபிரசங்கம் போன்ற கலை நிகழ்வுகளில் இவரும் ஒருவராக கலந்து கொண்டு வந்தமையே இவருக்கு கலைகள் மீதான ஆர்வத்தை தூண்டியதுடன் பாரம்பரிய வாத்திய இசைத் துறைக்குள் பிரவேசிப்பதற்கு வழிகோலாய் அமைந்தது.

கேள்வி ஞானத்தின் மூலமாக பாரம்பரிய வாத்திய இசையினை பயிற்சியெடுத்த வந்த இவருக்கான களத்தினை சிறப்பாக அமைத்துக் கொடுத்தது தம்பலகாமம் ஆதி கோணநாயகர் தேவஸ்தானமே என்பது பதிவுக்குரிய விடயமாகும். இவ்வாறாக தனது இசைப் பயணத்தினை தொடர்ந்து வந்த இவர் ஆரம்பகாலங்களில் இயங்கி வந்த கலைத்தாய் இசைக்குழுவில் இணைந்து தான் பிறந்த மண்ணிற்கு முன்மாதிரியான கலைச் செயற்பாடுகளை ஆற்றி வந்ததுடன் இன்று புதுக்குடியிருப்பு கலை இலக்கிய மன்றத்துடன் இணைந்து கிராமத்தில் வாழ்கின்ற பிள்ளைகளுக்கு சமய உணர்வை புகட்டும்



நோக்கில் பஜணை நிகழ்வுகளை தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோவிலுக்கு பிரதி வெள்ளிக்கிழமை தோறும் தவறாது கொண்டு செல்கின்றார். அத்துடன் இந்து கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்படும் அறநெறி பாடசாலையின் போட்டிகளுக்கான வில்லுப்பாட்டு நிகழ்வுகளை மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்து வரும் அதேவேளையில், தம்பலகாமம் பிரதேச செயலகத்திலும், திருகோணமலை மாவட்ட செயலகத்திலும் தனது கலைச் சேவையை ஆற்றத் தவறவில்லை.

இவ்வாறாக 45வருடங்களுக்கு மேலாக பாரம்பரிய வாத்திய இசையில் அனுபவம் கொண்டு தனது வயோதிப பருவத்திலும் இளம் சமுதாயத்தை தமிழ் கலாசார, சமய நல்வழிக்கான நேரான பாதையில் கொண்டு செல்லும் நோக்கில் சலிக்காது முயற்சியெடுத்து நம் மண்ணுக்கு சிறப்பாக கலைச் சேவையாற்றி வரும் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் மூத்த கலைஞர் சுபீட்சம் பத்திரிகையின் ''திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை'' என்ற பகுதிக்கு வழங்கிய செவ்விகாணல் இங்கு எமது வாசகர்களுக்காக;

**? உங்களது பாரம்பரிய வாத்திய இசைக் கலையின் பயணம் குறித்து பகிர்ந்து கொள்வீர்களா?**

வாத்திய இசைக்கலை சம்மந்தமாக நான் முறைப்படி யாரிடமும் கற்கவில்லை. சிறுவயதிலிருந்தே கோவில்களில் இடம்பெறும் கலை இசை சார்ந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டதன் வாயிலாக கேள்வி ஞானத்தின் மூலமாக பெற்றுக் கொண்ட அறிவின் மூலமே பாரம்பரிய வாத்திய இசைக் கலையை கற்றுக் கொண்டேன். எனது அப்பப்பா நாட்டு வைத்தியர். அப்பாவின் வழியில் உறவினரான எனது மாமா வேலுப்பிள்ளை மகாலிங்கம் பல்துறைக் கலைஞர். இவ்வாறாக எனது பரம்பரையைச் சேர்ந்தவர்களின் கலை ஆளுமைகளும் என்னை இசைக் கலைக்குள் உள்வாங்குவதற்கு காரணமாய் இருந்தன. இதன்



மூலமாகவே பாடசாலைக் காலத்தில் சாம்பசிவம் ஐயா மூலமாக சிவயோக சமாஜத்தின் கலை நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஆர்வமே என்னை வாத்திய இசைத் துறைக்குள் வித்திட்டது என்று கூறலாம். இவ்வாறாக இசைத் துறைக்குள் அடியெடுத்து வைத்த எனக்கு முழுமையான ஆதரவையும், கள மேடை வாய்ப்பையும் தந்து என்னை சமூகத்திற்கு அடையாளம் காட்டி அங்கீகாரத்தை பெற்றுத் தந்த பெருமை தம்பலகாமம் ஆதி கோணநாயகர் தேவஸ்தானத்தையே சாரும். இவ்வாறு தொடங்கிய எனது இசைப் பயணம் இன்றுவரை தொடர்ந்து கொண்டு செல்வது கடவுளின் ஆசிர்வாதமே!

**? இதுவரையில், எவ்வாறான பாரம்பரிய வாத்தியங்களை வாசித்து வருகிறீர்கள்?**

இளமைக் காலத்தில் சக தோழமைகளுடன் இணைந்து காவடியாட்டம், கும்பநிகழ்வுகளில் கடம் வாசித்து வந்தேன். அதன் பின்னர் கஞ்சிரா, உடுக்கு, மவுத் ஆர்கன், டோல்கி வாத்தியங்களை வாசித்து வருகிறேன். இவற்றுள் முதன்மையாக டோல்கி வாத்தியத்தையே வாசித்து வருகிறேன்.

**? வாத்திய இசையில் முதல் மேடை அனுபவம் குறித்து பகிர்ந்து கொள்வீர்களா?**

இளமைக் காலத்தில் தம்பலகாமத்தில் இயங்கி வந்த கலைத்தாய் இசைக்குழுவுடன் இணைந்து தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோவிலில் இடம்பெற்ற சிவராத்திரி நிகழ்விலே எனது 20ஆவது வயதில் மவுத் ஆர்கன் வாசித்தமையே எனது முதல் மேடை அனுபவமாகும்.

**? எவ்வாறான நிகழ்வுகளில் உங்களது வாத்திய இசையை வெளிப்படுத்தி வருகிறீர்கள்?**

பெரும்பாலும் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோவிலில் இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகளிலும், அதிலும் முதன்மையாக சிவராத்திரி நிகழ்விலும், ஏனைய கந்தளாயிலுள்ள கோவில் நிகழ்வுகளிலும், திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் திருவிழா நிகழ்விலும், திருமண வீடுகளிலும், பூப்புனித நீராட்டு விழாவிலும் வாசித்துள்ளேன். ஆரம்ப காலகட்டத்தில் கிண்ணியா வாழ் முஸ்லிம்களின் திருமண நிகழ்வுகள், வேறு கலை நிகழ்வுகளிலும் வாசித்துள்ளேன்.

**? வாத்திய இசைத் துறை தவிர வேறு துறைசார் ஆளுமைகள் குறித்து கூறுவீர்களா?**

பழைய காலத்து சினிமாப் பாடல்களின் மெட்டை வைத்துக் கொண்டு கிராமிய, பக்தி பாடல்களை எழுதி பாடி வருகிறேன். குறிப்பாக பக்தி பாடல்களில் ஐயப்பன்சுவாமி பாடல்களை எழுதி பாடி வருகிறேன். மேலும் அண்ணாவிமார்களின் பாடல்களை இன்றைய காலகட்டத்தில் வெளிக்கொணரும் வகையில் அவற்றையும் சில சந்தர்ப்ப நிகழ்வுகளில் எடுத்து சினிமா மெட்டுக்கமைவாக பாடியும் வருகிறேன்.

**? புதுக்குடியிருப்பு கலை இலக்கிய மன்றத்தில் உறுப்பினராக இணைந்து எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறீர்கள்?**

எமது மன்றத்தினூடாக தம்பலகாமத்தைச் சேர்ந்த பிள்ளைகளை சமய வழியில் நெறிப்படுத்தும் நோக்கில் வெள்ளிக்கிழமை தோறும் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோவிலில் பஜணை செயற்பாட்டை தொடர்ந்து செய்து வருகிறோம். மேலும் வில்லுப்பாட்டு நிகழ்வுகளுக்கான பயிற்சிகளையும் வழங்கி வருகின்றேன். எமது மன்றத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள பாடசாலை மாணவர்கள், மூத்த, இளம் கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் இணைந்து மாதம் ஒருமுறை ஏதாவதொரு சிறு கலை நிகழ்வை செய்து வருகிறோம். இவ்வாறாக எமது பாரம்பரிய கலைகளை அழியாது பாதுகாக்கும் நோக்கத்தில் இளைய தலைமுறையினருக்கு அக் கலையை கடத்தும் வகையிலான சேவையை எம் மன்றத்தினூடாக ஆற்றி வருகிறோம்.

**? உங்களது வாத்திய இசைக் கலையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல முடிகின்றதா?**

எனக்கு 2 பெண் பிள்ளைகள். குடும்ப சூழ்நிலையின் நிமித்தம் அவர்களால் எனது கலையை எனக்குப்பின் கொண்டு செல்ல முடியாத நிலை.

**? ஒரு வாத்திய இசைக் கலைஞருக்கு இருக்க வேண்டிய பண்பாக நீங்கள் கருதுவது?**

முதன்மையான பண்பாக பொறுமை கட்டாயம் இருக்க வேண்டும். அந்தப் பொறுமை மூலமாகவே வாத்திய இசையில் ஞானம் உண்டாகும். அத்துடன் முறையாக வாத்திய இசையை முறைப்படி கற்றுத் தேர்ந்தவர்கள் தங்களுடனே அக் கலையை வைத்துக் கொள்ளாமல் பிறருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற மனப்பாங்கை வளர்த்துக் கொள்வதற்கான மனநிலை வேண்டும்.

**? இசைக் கலையில் உங்களுக்கு ஏதேனும் ஆதங்கம் உண்டா?**

ஆம். வாத்திய இசையினை முறைப்படி கற்று இருந்தால் கற்க ஆர்வம் கொண்டு வருபவருக்கு என்னால் கற்றுக் கொடுத்து இருக்கலாம் என்பதே கலை ரீதியாக எனது ஆதங்கம்.

**? கலைத் துறையில் கிடைத்த விருதுகள் குறித்து கூறுவீர்களா?**



பெரியளவிலான விருதுகள் வாத்திய இசைத் துறையில் இதுவரையில் கிடைக்கவில்லை.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பாரம்பரிய கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கிராமிய பாடல் துறையில் விருது பெற்றமை வாழ்வில் மறக்க முடியாத தருணமுமாகும்.

**? வாத்திய இசைக் கலைஞராக உங்களின் இன்றைய மனத்தாக்கம் குறித்து பகிர்ந்து கொள்ள விரும்புகின்றீர்களா?**

ஆம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இன்றைய நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இன்று வாத்திய இசைக்கலைஞரின் அடையாளத்தை மறைத்ததோடு பங்களிப்பை குறைத்து விட்டது. திருகோணமலை மாவட்டத்தை பொருத்தவரை நேரலையாக வாத்திய இசைக் கலையின் வெளிப்பாட்டு காட்சிகளை பார்க்க முடியாத மோஷமான சூழ்நிலை காணப்படுகிறது. இவற்றுக்கு எல்லாம் காரணம் கரோக்கி இசையின் ஊடுறுவலே. கரோக்கி இசை இறுவட்டுக்கள் மேலோங்கிய நிலையில், வாத்திய இசைக்கேற்ற வகையில் நிகழ்வுகளை கொண்டு செல்வதற்கு ஏற்பாட்டாளர்கள் விரும்புவதுமில்லை. நிகழ்வாளர்கள் அதனை கற்றுக் கொள்ள ஆர்வமுமில்லை என்ற தொடர்பாடல் அமைப்பையே இன்றைய சமுதாயத்தில் அவதானிக்க முடிகிறது. கரோக்கி இசையினால் பாரம்பரிய வாத்திய இசையின் அடையாளம் மறைக்கப்பட்டு வருதோடு வாத்தியக் கலைஞர்களுக்கான தேடலையும் குறைந்து விட்டமையே இன்று ஒட்டுமொத்த வாத்தியக் கலைஞர்களின் வேதனைக்குரிய மனநிலையாகும்.

**? தம்பலகாமத்தில் பாரம்பரிய இசைக்குள்ள சவாலாக நீங்கள் கருதுவது?**

எமது தம்பலகாமம் கிராமம் பாரம்பரியமிக்கது. பாரம்பரிய நிகழ்வுகளில் மிக முக்கியமாக இன்றுமேலோங்கி நிற்கும் ட்ரம்பெட் இசையின் தாக்கமே பெரும் சவாலாக இருக்கின்றது என்பது எனது கருத்து.

**? நிறைவாக, வளர்ந்து வருகின்ற இளம் தலைமுறையினருக்கு நீங்கள் கூற விரும்புவது?**

கலைகள் நிறைவானவை. எக் கலையாக இருந்தாலும் அதில் விருப்பு கொண்டு முறைப்படி முழுமையாக கற்றுத் தேர்ந்து அதன் தனித்துவ தன்மை என்றுமே மாறாமல் முன்னெடுத்து செல்ல வேண்டிய பொறுப்பு உங்கள் கைகளிலே உள்ளது. நீங்கள் கற்ற கலையை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்கும் மனப்பாங்கை விருத்தி செய்து கொள்ளுங்கள். கலை வாழ்க்கை அற்புதமானது. அதனுடன் இணைந்த பயணம் மன வலிமையையும், உற்சாகத்தையும், பலத்தையும் தரவல்லது. உணருங்கள். செயலாற்றுங்கள். மேன்மை அடைவீர்கள். அந்த வகையில், கலைஞர்களை வெளிக்கொண்டு வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு இப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

இன்றைய சூழ்நிலையில் பாரம்பரிய வாத்தியக் கருவிகள் வழக்கிலிருந்து மறைந்து கொண்டே வருகின்றன. மக்களிடம் பாரம்பரிய வாத்தியக் கருவிகள் மீதான ஆர்வம் அருகிக்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. பாரம்பரிய வாத்திய இசையின் அடையாளத்தினையும், பாரம்பரிய வாத்தியக் கலைஞர்களுக்கான தேடலையும் இன்றைய தொழில்நுட்ப மாற்றத்தில் உண்டான கரோக்கி இசை மறைத்து விட்டது. இன்றைய எம் சமுதாயம் கோவில்களிலும், கலாசார நிகழ்வுகளிலும் கரோக்கி இசையினையே பயன்படுத்தி வருகின்றனர். இதனை கருத்திற் கொண்டு எமக்கான பாரம்பரிய அடையாளம் கொண்ட நிகழ்வுகளிலாவது வாத்திய இசைக் கலைஞர்களுக்கான முக்கியத்துவத்தை கொடுக்க சமுதாயம் முன் வர வேண்டும். பாரம்பரிய வாத்திய இசையின் புனிதத்தையும், அதன் மேன்மையையும் இனிவருங் காலத்து தலைமுறையாவது தெரிந்து கொண்டு பாதுகாக்க வேண்டுமென்பதே எனது கருத்து.

இவ்வாறாக பாரம்பரிய வாத்திய இசை மூலமாக திருகோணமலை மாவட்டத்திற்கு பெருமையைத் தேடித் தந்த இக் கலைஞர் நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என பிரார்த்தித்துக் கொண்டு கலைஞரை சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.

நன்றி!

**தொடரும்.......**

**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**
**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்.**



# ஜனநாயக சூழ்நிலையாக மாணவர்களை மாற்றுவதற்கு மாணவர் பாராளுமன்றம் அமைகின்றது

## பணிப்பாளர் செல்வி ஜி.டீ.தேவராஜ்

(வாஸ் கூஞ்ஞ)

பாடசாலைகளில் நிலவும் பிரச்சனைகளை தாங்களே இனம் கண்டு தாங்களே ஒரு தலைவராக மாறி அதற்கான தீர்வுகளையும் தெரிவிக்கும் ஜனநாயக சூழ்நிலையாக மாணவர்களை மாற்றுவதற்கு மாணவர் பாராளுமன்றம் அமைகின்றது என வலயக் கல்விப் பணிப்பாளர் வலய மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் செல்வி ஜி.டீ.தேவராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

2023 கல்வியாண்டுக்கான மன்னார் கல்வி வலய மாணவர் பாராளுமன்றம் திங்கள் கிழமை (06) மன்னார் கல்வி வலய மண்டபத்தில் இடம்பெற்றபோது வலயக் கல்விப் பணிப்பாளர் வலய மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் செல்வி ஜி.டீ.தேவராஜ் பாராளுமன்ற அமர்வுக்குப் பின் தொடர்ந்து உரையாற்றுகையில்;

மாணவர் பாராளுமன்ற பிராதன வேலைத் திட்டமானது 03.02.2019 அன்று கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கு அமைவாக நடைபெற்று வருகின்றது.

ஜனநாயகத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள் தேசிய கல்வி பொதுக் குறிக்கோள் மற்றும் பொது தேர்ச்சி அடைவதற்கு சந்தர்ப்பங்கள் உருவாக்குதல் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமாக இது அமைகின்றது.

கற்றுக் கொண்ட பாடத்திட்டங்கள் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துதல் வெள;வேறு மக்கள் இனங்களுக்கிடையேயும் சமயக் குழுக்களுக்கிடையேயும் கூட்டுச்செயல்பாடு , சகவாழ்வு , சகோதரத்துவம் , புரிந்து வாழ்தல் ஆகியவற்றை விருத்தி செய்து முரன்பாடுகளை தீர்ப்பதற்கு வழிகோணல் பிரதேச மற்றும் தேசிய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு மாணவர்களை தேசியத்தில் கட்டி எழுப்புதல் நோக்காகக் கொண்டும் மாணவர்கள் மத்தியில் தலைமைத்துவத்தை விருத்தி செய்தல் போன்றவை குறிப்பிடத்தக்கதாக உள்ளது.



இன்றைய இந்த பாராளுமன்றத்தை நோக்கியபோது சரியான முறையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக புரிகின்றது.

பாடசாலைகளில் மாணவர் பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. வாக்குறிமையை சரியான முறையில் பயண்படுத்துவது என்ற அறிவினையை பாடசாலையில் பயிற்றுவிக்கப்படுகின்றது. இதுவும் ஒரு பிரதான நோக்கமாக உள்ளது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கும்போது செல்லுபடியற்ற வாக்குகள் என ஒரு குறிக்கப்பட்ட தொகை அறிவிக்கப்படுகின்றது நாம் அறிவோம்.

இவ்வாறு அமையக் கூடாது என பாடசாலை மட்டங்களிலேயே மாணவர்களுக்கு தெளிவுப் படுத்தப்படுகின்றது.

அத்துடன் ஜனநாயக பண்புகளை சரியான முறையில் அறிந்து கொள்வதற்றும் இது மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பமாகவும் அமைகின்றது.

மேலும் பாடசாலைகளில் நிலவும் பிரச்சனைகளை தாங்களே இனம் கண்டு தாங்களே ஒரு தலைவராக மாறி அதற்கான தீர்வுகளையும் தெரிவிக்கும் ஒரு சூழ்நிலையாகவும் இது அமைகின்றது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர் பாராளுமன்றமே இதுவாகும். இது வலயத்திலிருந்து மாகாணத்துக்கும் பின் தேசிய மட்டத்துக்கும் இது முன்னெடுக்கப் பட உள்ளது.

இன்று இந்த பாராளுமன்ற அமர்வில் நீங்கள் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் பெரியோர்களால் சிந்திக்கப்படாத விடயங்களை முன்வைத்தது பாராட்டக் கூடியது.

நாங்கள் பாடசாலைகளில் மாணவர்களுக்கு இவ்வாறான சந்தர்ப்பங்களை வழங்குவில்லை. ஆகவே நாம் இவ்வாறான செயல்பாடுகளுக்கு இவர்களுக்கு தளம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் மற்றவர்களுக்கு மதிப்பளிப்பது மற்றவர்கள் கூறும் கருத்துக்களுக்கு செவிமடுப்பது அனைவரும் இணைந்து செயல்படுவது இது ஒரு வழி சமைக்கும் தளமாக அமைந்துள்ளது.

மன்னார் வலயம் கொடுத்து வைத்த வலயம். பல இன மாணவர்களும் கலந்து கொண்டு ஒன்றுபட்டு செயல்படும் வலயமாக இருப்பதால் இந்த பாராளுமன்றத்தில் நீங்கள் அனைத்து இன மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டு ஒன்றுபட்டு செயல்பட்டது பாராட்டுக்குரியது என வலயக் கல்விப் பணிப்பாளர் வலய மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் செல்வி ஜி.டீ.தேவராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

# களவாடப்படும் மாடுகள்

## சம்மாந்துறை பொலிஸார் எச்சரிக்கை!

(பாறூக் ஷிஹான்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் அதிகரித்து வரும் களவு திருட்டு தொடர்பாக அவதானமாக இருக்குமாறு பொது மக்களை சம்மாந்துறை பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாடுகள் அதிகமாக களவாடப்படுவதாகவும் .இவ்வாறு களவாடப்படும் மாடுகள் அறுவைக்கு உள்ளாக்கப்பட்டு பங்கு இறைச்சியாக விற்பனை செய்யப்படுவதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆகவே பொது மக்கள் தங்களுக்கான இறைச்சியை கடைகளில் பெற்றுக் கொள்வதே சிறந்ததாகவும்

பங்குகளுக்காக வெட்டப்படும் மாடுகளில் அதிகமானவை களவாடப்பட்ட மாடுகளாகவே உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இது சம்பந்தமாக பொலிஸாருக்கு அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாக மேலும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனவே பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.மாடுகளை வைத்திருப்போர் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.மேலும் அதிகமானவர்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது அருகில் இருக்கும் அயல்வீட்டு உறவினரிடம் நாம் வெளியே செல்வதாகவும் கூறி , வீட்டில் உள்ள அனைவரும் வெளியே செல்கின்றனர்.

சில நேரங்களில் அதை முகநூலிலும் பதிவிடுகின்றனர்.அதை தொடந்து திருடர் அவ்வாறான வீடுகளை இனங்கண்டு திருட்டு சம்பவத்தில் ஈடுபடுவதாக தெரிவிக்கின்றனர் .மக்களை விழிப்புணர்வுடன் இருக்குமாறும் இந்த வருடம் மாத்திரம் 03 மோட்டார் வாகனங்கள் திருடப்பட்டுள்ளதாகவும் அவற்றை பொலிஸார் மீட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும் வயல் வேலைகளில் ஈடுபடுவதற்காக செல்வோர் வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்தும் போது பாதுகாப்புத்தன்மையை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.சம்மாந்துறை பிரதேசத்தில் இவ்வாறான குற்றச் செயலில் அதிகமாக போதைபொருள் பாவனையில் உள்ளவர்களே ஈடுபடுகின்றதாக தெரிவித்தனர்.

எனவே இரவு நேரத்தில் உங்களுடைய பிரதேசங்களில் சந்தேகத்திற்கு இடமாக யாரும் நடமாடினால் உடனடியாக சம்மாந்துறை பொலிஸாரிடம் அறிவிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கிழக்கில் 499 அதிபர் நியமனங்கள் வழங்கி வைப்பு!





கிழக்கு மாகாணத்தில் அதிபர் தரம் 3 நிறைவு செய்த 499 பேருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களால் (06) நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நியமனங்கள் வழங்கும் நிகழ்வு திருகோணமலை இந்துக் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான கபில அத்துகோரல, டீ.வீரசிங்க, ஏ. எல். எம். அதாவுல்லா, அலி சாஹிர் மௌலானா, பிரதம செயலாளர் R.M.K.S ரத்நாயக்க, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் டவலியு. திசாநாயக்க உட்பட பல அரச அதிகாரிகளும் கலந்துக் கொண்டனர்.

# ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த ஓவியகூட பரிசளிப்பு நிகழ்வு







(த.சுபேசன்)

சாவகச்சேரி ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூடத்தின் வடக்கு மாகாணம் தழுவிய கலைப் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் 05/11/2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஓவிய கூட வளாகத்தில் இடம்பெற்றிருந்தது.

ரி.பி ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூடத்தின் ஸ்தாபகர் திருமதி யோகமணி அழகரத்தினம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்குமார் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் ஸூம், கௌரவ விருந்தினர்களாக சிவபூமி நிலையத் தலைவர் ஆறு திருமுருகன்,அமெரிக்கன் சிலோன் தேவாலய தலைவர் தேவகுணானந்தன் அடிகளார்,சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஜெயரூபன், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் மனோகர், விரிவுரையாளர் பிரசாந், வடமராட்சி வலயக்கல்வி அலுவலக அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆரியதாஸ் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு மூத்தோரின் திருமலை சமயச் சுற்றுலா!



( வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவைச் சேர்ந்த 50 மூத்தோர் சமயச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் செய்தனர்.

குழுவினர், வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோவில் ,கங்குவேலி அகத்தியர் தாபனம் சிவன் கோவில், கோணேசுவரர் கோவில் ,இலட்சுமி நாராயணன் கோவில்,காளிகோவில் கன்னியா வெந்நீர் ஊற்று முதலிய இடங்களைப் பார்வையிட்டனர் .

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கப் பணிமனைக்கும் விஜயம் செய்தனர்.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் காரைதீவு மூத்தோரை வரவேற்று அவர்களுக்கு மதிய உணவு வழங்கிக் கௌரவித்தார்.

# சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் மிகத் திறமையானவர்களும் இருக்கின்றனர்

## கிழக்கு மாகாண ஆணையாளர் றிஸ்வானி றிபாஸ் தெரிவிப்பு!





(அபு அலா)

கிழக்கு மாகாணத்திலுள்ள 51 சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் 1204 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதுதவிர அரச பாதுகாப்பு 4 இல்லங்களில் 45 பிள்ளைகளும் பராமரிக்கப்படுவதாக கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் (திருமதி) றிஸ்வானி றிபாஸ் தெரிவித்தார்.

உலக சிறுவர் தினத்தையொட்டி எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள் எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண மட்ட சிறுவர் தின நிகழ்வு (05) திருகோணமலை ஹிந்து கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்ற பிள்ளைகளில் மிகத் திறமையானவர்களும் இருக்கின்றனர். இம்முறை வெளியான புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரம் போன்ற பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளனர். அதில் புலமைப் பரிசில் பரீட்சையில் ஒருவரும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 8அ சித்திபெற்ற 2 பேரும், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தது பல்கலைக்கழகத்திற்கு 22 மாணவர்களும் தெரிவாகியுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்வியில் மட்டுமல்ல விளையாட்டு, கலை, கலாசார மற்றும் மேடை நாடகம், பேச்சு, பாடல், இசை போன்ற பல்வேறுபட்ட திறன்கொண்டவர்களும் இருக்கின்றனர். அவ்வாறானவர்களை இன்றைய

நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கவுள்ளோம் என்றார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முதளிதரன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள், கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், சி.டி நிறுவனத்தின் பணிப்பாளர், சி.டி.எப். நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் லயன்ஸ் கழகத்தின் பிராந்திய தவிசாளர் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின்போது, சிறுவர்களுக்கான விழிப்புணர்வு மேடை நாடகம், பேச்சு, பாடல், இசை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றதையடுத்து, தேசிய மற்றும் மாகாண மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட முதல்நிலை பிள்ளைகள், மாவட்ட ரீதியில் இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற அணியினர், புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியவர்கள் உள்ளிட்ட பலர் இன்றைய நிகழ்வின் அதிதிகளினால் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ், பரிசுப்பொதிகள், கின்னங்கள் போன்றவை வழங்கி வைக்கப்பட்டது.

# கண்டி- கம்பளையில் யுவதிகளுக்கு விருதுகள் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு


















**(ஏறாவூர் நிருபர்)**

அழகுக்கலை, தையல், மருதாணி மற்றும் கேக் தயாரிப்பு போன்ற கலைகளில் பயிற்சிகளைப் பூர்த்திசெய்துள்ள சுமார் என்பது யுவதிகளுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கண்டி- கம்பளையில் சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு ஏறாவூர் முன்னா பியூட்டி எக்கடெமியில் இந்த யுவதிகள் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தவர்களாவர்.

கம்பளை நகர சபையின் முன்னாள் முதல்வர் சமந்த அருண குமார இந்நிகழ்வில்; பிரதம அதிதியாகக்கலந்துகொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் முகமட் பிர்தௌஸ் நிகழ்வில் விசேட அதிதியாகக்கலந்துகொண்டார்.

அழகுக்கலை கலைஞரான ஆயிஷா முனவ்வர், சமூக செயற்பாட்டாளர்களான பைறுசா றாசிக், நஸீறா கபூர் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் அப்துல் நாஸர் ஆகியோர் இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

கம்பளை அல் ஹிக்மா முன்பள்ளி சிறுவர்களது கலை நிகழ்ச்சிகள் இங்கு அரங்கேற்றப்பட்டன. கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் புத்தளம், திருகோணமலை, அம்பாறை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் உள்ளிட்ட நாட்டின் அனைத்துப்பகுதிகளையும் சேர்ந்த யுவதிகள் நேரடியாகவும் சூம் தொழில் நுட்பம் வாயிலாகவும் பயிற்சிகளில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கட்டார், குவைத், துபாய், இந்தியா மற்றும் மலேஷியா போன்ற நாடுகளில் தங்கி வாழ்பவர்களும் இந்த நிறுவனத்தில் பயிற்சிகளைப்பெற்றுள்ளனர்.

இந்த நிகழ்வின்போது அதிதிகள் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பயிற்சிகளைப் பூர்த்திசெய்துள்ள யுவதிகள் தமது ஆசிரியைக்கு நினைவுச்சின்னம் வழங்கினர்.

# இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழர் தொடர்பான கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும்

**( வாஸ் கூஞ்ஞ)**

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த 2022 ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு வேண்டிய 100 நாள் செயல்முனைவின் இறுதி நாளான 2022ம் ஆண்டு நெவம்பர் மாதம் 08ம் திகதி அன்று வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வாக " ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு " வேண்டும் எனும் மக்கள் பிரகடனம் வெளியிடப்பட்டிருந்தது.

அந்த வகையில் இப்பிரகடனம் வெளியிடப்பட்டு ஓராவது ஆண்டு பூர்த்தி நாளான எதிர்வரும் 08.11.2023 ( புதன் கிழமை) அன்று வடக்கு கிழக்கு மக்கள் ஒன்றிணையும் " இலங்கையின் வடக்கு கிழக்குத் தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம் " எனும் கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டல் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இதனை வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பொது மக்கள்இ சிவில் செயற்பாட்டாளாகள்இ அரசியல் தலைவர்கள் இ ஆய்வாளர்கள் இ கல்விமான்கள் இ பாதிக்கப்பட்ட மக்கள் இ பல்கலைக் கழக மாணவர்கள் இ தொழில் சங்கப் பிரதிநிதிகள் இ ஊடகவியலாளர்கள்இ பெண் மனித உரிமை பாதுகாவலர்கள் என பலருக்கும் தெரியப்படுத்த விரும்புகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் பங்கேற்குமாறும் அனைவருக்கும் அழைத்து விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கை தீவில் உள்ள வடக்கு கிழக்கு தழிழ் மக்கள் கடந்த 1505 ஆண்டு வந்தடைந்த போர்த்துக்கேயர் காலம் தொடங்கி ஒல்லாந்தர்இ இறுதியான காலனித்துவ ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் மற்றும் 1948ம் ஆண்டிற்குப் பின்னரான இலங்கை சிங்கள பேரினவாத அரசின் இன்றுவரையான ஆட்சிக் காலம் வரை பல வகையான துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டு வருகின்றோம் எனவும் இந்நிலையில் இவ்வாறான சிங்கள பேரினவாதத்தின் இனவாத அடக்கு முறைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளான தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வேண்டிய போராட்டங்கள் மற்றும் சந்திப்புக்களை மேற்கொண்டதுடன் குறிப்பாக அரசியில் தீர்வு தொடர்பான ஒப்பந்தங்களையும் பேச்சுவார்த்ததைகளையும் தமிழ் தலைவர்கள் காலனித்துவக் காலங்களிலும் அதற்கு பின்னராக இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசின் தலைவர்களுடனும் மேற்கொண்டிருந்தனர்.

குறிப்பாக செல்வா பண்டா ஒப்பந்தம்இ செல்வா டட்லி ஒப்பந்தம்இ இலங்கை இந்திய ஒப்பந்தம்இ திம்பு பிரகடனம் மற்றும் ஒஸ்லோ பேச்சுவார்த்தை என்பனவற்றை இங்கு குறிப்பிட முடியும் எனவும்

ஆனால் மேற்படி அரசியில் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒப்பந்தங்கள் அனைத்தும் குறிப்பாக சிங்கள தலைவர்களால் நிராகரிக்கப்பட்டு ஏமாற்றப்பட்ட வரலாறுகளே அதிகம் எனவும்

தமிழ் மக்கள் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வரலாற்றுக்கு முந்தைய காலம்தொட்டு பாரம்பரியமாக தமக்கேயான தனித்துவமான அடையாளத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பிராந்தியத்தில் எண்ணிக்கைப் பெரும்பான்மையினரான தமிழ் மக்களுடன் எண்ணிக்கைச்சிறுபான்மையினரான தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகள் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட முறையில் மேற்கொண்டுவந்த இனவாத அடிப்படையிலான அரசியல்இ மொழிஇ பொருளாதாரஇ சமூக ரீதியான அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகளின் காரணமாகவே வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கு ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துள் மாகாண முறைமையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும்.

தமிழ் மொழியும் அரச கரும மொழியாக அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

எனினும்இ 2006ல் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகு பிரிக்கப்பட்டு வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக்கப்பட்டன.

குறிப்பாக 1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கை மூலமான 13வது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டு இற்றுடன் 36 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது.

இந்தக் கால இடைவெளியில் இலங்கை அரசினால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதுடன் தமிழர்கள் மீது போர்க் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர் இடப்பெயர்வு மற்றும் பலவருடகால அகதி முகாம் வாழ்வை அனுபவித்தனர்.

போரினால் இருப்பிடங்களும்இ சொத்துக்களும்இ வாழ்வாதாரங்களும் மரங்கள் உட்பட முற்றாக அழிக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டதின் மூலம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இராணுவமயமாக்கம்இ திட்டமிட்ட முறையிலான நில அபகரிப்புஇ மனித உரிமை மீறல்கள் காரணமாக பாரிய அச்சுறுத்தலை இன்றுவரையில் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

மேற்படி இன அடக்கு முறைகளுக்கும்இ ஒடுக்கு முறைகளுக்கும் உள்ளாகி இருக்கும் எமது வடக்கு கிழக்கு மக்கள் தனியான தேசியம்இ தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழக் கூடிய வகையிலான "ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு " வேண்டும் எனும் அரசியல் தீர்வு கிடைக்கப் பெறும் பட்சத்திலேயே வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் நின்மதியாகவும் சுயமாகவும் தமக்கான அடையாளத்ததுடன் வாழ முடியும் எனவும்

இந்நிலையில் எதிர்வரும் 08.11.2023 அன்று யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் எம்மால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டலும் மேற்கொள்ள உள்ளோம் என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

# சிரேஸ்ட ஊடகவியலாளர் இரா.துரைரெட்ணத்தின் கிழக்கில் சிவந்த சுவடுகள் நூல் வெளியீடு



















**(சுமன்)**

சிரேஸ்ட ஊடகவியலாளர் இரா.துரைரெட்ணம் அவர்களினால் எழுதப்பட்ட 'கிழக்கில் சிவந்த சுவடுகள்' எனும் கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பிலான தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு இன்றைய தினம் கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கம், மட்டு ஊடக அமையம் என்பவற்றின் ஏற்பாட்டில் இன்றைய தினம் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சிரேஸ்ட ஊடகவியலாளர் செ.பேரின்பராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் அட்சியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம், முன்னாள் மாநகர முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்சன் உள்ளிட்ட ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரந்திநிதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்நூலின் அறிமுக உரையை முன்னாள் கோட்டக்கல்வி பணிப்பாளர் அ.சுகுமாரன் அவர்களும் நூல் நயவுரையினை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளருமான கி. துரைராசசிங்கம் அவர்களும் நிகழ்த்தியிருந்தனர். அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்சன் ஆகியோரால் சிறப்புரைகள் இடம்பெற்றன.

இதன்போது வருகை தந்த அதிதிகளுக்கு நூலாசிரியரால் நூல் கையளிக்கப்பட்டதுடன், பொது அமைப்பினர் உள்ளிட்ட ஊடகவியலாளர்களுக்கும் நூல் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மண்சரிவு அபாயம் காரணமாக புஉ குடும்பங்கள் இடம் பெயர்வு

மண்சரிவு அபாயம் காரணமாக பதுளை மாவட்டத்தின் பெரகல, பத்கொட பிரதேசத்தில் 42 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

குறித்த பகுதியில் அண்மையில் ஏற்பட்ட மண்சரிவினால் இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளதாக பதுளை மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த குடும்பங்களில் சிலர் அருகில் உள்ள பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர், ஏனையோர் உறவினர் வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

மண்சரிவு காரணமாக ஹப்புத்தளை - யஹலபெத்த வீதியூடான வாகன போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஆறு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையை நீட்டித்துள்ளது. பதுளை மாவட்டத்தில் ஹப்புத்தளை மற்றும் ஹல்துமுல்ல பிரதேச செயலகங்களுக்கும் கண்டி மாவட்டத்தின் தும்பனை பிரதேச செயலகத்திற்கும் 2 ஆம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலகங்களுக்கு முதல் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலவும் மழையினால் அத்தனகலு ஓயா மற்றும் நில்வலா ஆறு பெருக்கெடுத்து ஓடும் அபாயம் தொடர்வதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீரியல் மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் எஸ்.பி.சி. சுற்றுவட்டாரத்தில் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இன்று பெரும்பாலான பகுதிகளில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## காணித் தகராறு: துப்பாக்கிப் பிரயோகத்தில் அம்பாறையில் ஒருவர் உயிரிழப்பு!

அம்பாறையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை, பண்டாரதூவ, மாயாதுன்ன பிரதேசத்தில் நேற்று இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியின் ஊடாகவே இந்த பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர், தனது வீட்டில் வீட்டின் பின்புறம் குளித்துக் கொண்டிருந்த போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வயற்காணி தொடர்பாக ஏற்பட்ட தகராறே துப்பாக்கி பிரயோகத்திற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

மரணம் தொடர்பான நீதவான் விசாரணையைத் தொடர்ந்து பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரை கைது செய்ய உகன, பண்டாரதுவ பொலிஸார் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ஹரி இல்லச்சிறுவர்களுக்கு கௌரவம்

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்களத்தின் ஏற்பாட்டில் 05.11.2023 திகதி திருகோணமலையில் நடாத்தப்பட்ட சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் ஹரி இல்லச்சிறுவர்களுக்கு கௌரவ வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள 51 சிறுவர் இல்லங்களில் பொதுப்பரீட்சையின் உயர்பெறுபேறு பல்கலைகழக அனுமதி மற்றும் இணைப்பாட செயற்பாட்டின் திறமை காட்டியவர்கள் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

இதன்போது ஹரி இல்லச்சிறுவர்கள் பல்கலைகழகம் தெரிவாகியமை, சாதாரண தர பரீட்சையில் அதிக சித்தி பெற்றமை, கிழக்கு மாகாணத்தில் உள்ள இல்லங்களில் கல்வி செயற்பாடுகளில் முன்னிலையாக திகழ்கின்றமை உள்ளிட்ட பிரகீர்த்திய செயற்பாடுகளில் முன்னிலை வகிக்கின்ற வகையில் கௌரவம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

